# கற்பனையோ...
# கைவந்ததோ...

## 1



'கக் கக்...' பரஸ்பர பேச்சுடன் குட்டைக்கால்க
அசைந்து நகர்ந்த கூஸ் வாத்துக்களைப் புன்னகையு
பார்த்திருந்தாள் புனிதா.

நடை சற்று விநோதமாய் இருந்தாலும், இப்பறவைக
அழகு அலாதி. அவற்றின் சிறகுகள்தான் எத்தனை வெண்
மென்மை.. விதவிதமாய் கிரீமும் பவுடரும் பூசியபின்ன
இந்த விடுதியில் உள்ள பெண்களில் யாருடைய கன்ன
இத்தனை வெளுப்பாய், மிருதுவாய் இல்லையே!

இது கடவுளின் ஞானம் காற்றிலும் வெயிலிலும் அலை
பறவைகளை அதற்கேற்றபடி படைத்தவர், தன் தோற்றத்
பொத்தி பாதுகாக்க முற்படும் மனிதன் தானாய் மெ
கெட்டுமே என்றிருந்துவிட்டார் போலும்!

மெனக்கெடல் என்றதும் சரிகா நினைவு வந்தது... இது ஆடம்பரப் பள்ளி இல்லை. ஆனால், சரிகா ஆடம்பரப் பிரியை. கோவில்பட்டியில் பிரபல தொழில் அதிபர் ஒருவரின் மூன்றாம் மனைவியின் மகள்.

தன் மகள் கண்டிப்பான சூழலில் வளர்வது நல்லது என விரும்பிய தாயார், சரிகாவை இந்த நாகர்கோவில் கான்வென்டில் சேர்த்துவிட, தண்ணீரை விட்டெடுத்த மீனாய் தவித்துவிட்டாள் மகள்!

வேளைக்கு ஒரு அலங்காரம் செய்து தன்னை ஆசுவாசப் படுத்திக் கொள்ள முயற்சிப்பவளை விநோதமாய் பார்த்ததுண்டு புனிதா.

இரவு சரிகா முகம் கழுவ, இவள்தான் இளஞ்சூட்டில் தண்ணீர் எடுத்துப் போவாள்.

முகத்தை சோப்பு போட்டு அலம்பியதோடு விடமாட்டாள். பொட்டு பொட்டாய் கிரீம் இட்டு மேல்நோக்கி நீவுதல் நடக்கும்.

"இதெதுக்கு இந்த ராத்திரி வேளையில்..."

"பாரு. காட்டறேன்."

மெல்லிய ட்ஷ்யூ காகிதத்தால் முகத்தை அழுந்தத் துடைக்க அது பழுப்பாய் மாறும்...

"எத்தனை அழுக்கு பார்த்தியா? வெறும் சோப்பு போதாது...

"ஓஹோ..."

"இப்ப அடுத்த கிரீமை பூசணும். முகம் பூ மாதிரி இருக்கும்."

"பதினேழு வயசுல ஏதும் பூசாமலேயே அழகாகத்தான் இருப்போம்."

சரிகா முகம் சுளிப்பாள்.



"அப்படி நினைச்சிட்டு திரிஞ்சா முப்பதிலேயே கிழவி தெரிவோம்... கவனமா இருந்தா ஐம்பதிலும் குமரி ம அசத்தலாம்."

புனிதாவிற்கு சிரிப்பை அடக்க முடியாமல் போகும்.

"என்னடி கிக்கிக்கீங்கற?"

"இல்ல... அம்பதுல குமரி மாதிரி ஏனிருக்கஓ அப்படியே அலட்டினாலும் நம்ப முதுகுக்குப் பின் சிரிப்பாங்க.. பொருந்தாதுல்ல?"

"போடி... இரு ஒரு நிமிஷம்... நீ என்ன பண்ணிக் ஏதாவது தடவிக்கிறியா... சதா உம் முகம் 'பளிச்' சுங்குது"

"சமையலறையில் பால்காய்ச்சின பாத்திரத்தைக் க போது அத வழிச்சு தடவிக்குவேன். தலைக்கு புளிச்ச சிஸ்டர் கிளேர் சொல்றது போல மனசை சுத்த வைச்சுக்கணும்.. முகத்துல அதுதான் தெரியும்..."

"சரியான ஓசிக் கேஸ்..."

சரிகா பள்ளிப் படிப்பை முடித்துப்போய் மூன்றாண் ஆகப்போகிறது... இப்போது இங்கு விடுதியில் யாரும் அத்தனை அழகுமில்லை... மெனக்கெடும் ரகமும் இ அத்தனைக்கு பணமும் கிடையாது.

ஒரு கூஸ் இவளைக் கோபமாய் திரும்பிப் பார்த்து கத்

"ஓ... இதோ தாரேன்."

கையில் கிண்ணத்திலிருந்த கேப்பைக் குருனை வடிகஞ்சியில் கலந்து வைத்தாள். கூடவே தண்ணீர் மற் குவளையில்.

கூச்சல் அதிகமானது. ஒன்றை ஒன்று மிரட்டி, ஆர்ப்பரித்தன. காரட் நிற அலகால் இரையை விழுங்கின.

தினம் தினம் ரசிக்கும் காட்சிதான் என்றாலும் புதிதாகவேத் தோன்றுகின்றது. கடந்த ஞாயிறன்று அந்தோணி பாதிரியார் பிரசங்கத்தில் சொன்னது இதைத்தானே?

'கிடைத்ததில் திருப்தி காணுகிறவனுக்குள்ளே இருக்கிறது சொர்க்கம் பெரும் செல்வ வாழ்வில் திளைத்தும் திருப்தி காணாதவனுக்கு ஏது நிம்மதி?'

உண்மைதான். இம்மூன்று ஏக்கர் பள்ளிக்கு வெளியே அவள் அறியாத உலகம். போக வர இருந்ததுண்டு என்றாலும் புழங்கியதில்லை. வெளியேயிருந்து படிக்க வரும் மாணவிகளின் பேச்சில் பெரும்வாரி இவளுக்குப் புரிவதே யில்லை... அவர்கள் குலுங்கிச் சிரிப்பதின் காரணம் புரியாமல் மலைத்திருக்கிறாள்.

'ஹை... விஜய்டி...! நோட்டின் அட்டையில் கண்ணைச் சுருக்கி, தலைசாய்ந்து சிரிக்கும் ஒரு வாலிபனைக் கண்டு குதிப்பார்கள்.

'ஐய்யோ... கேக்குதா... ஹரிஹரன் பாட்டு!' தொலைவில் கேட்கும் பாட்டில் கண் செருகுவார்கள்.

'அஜீத் சூப்பர்டி...' பத்திரிகைத் தாளுக்கு முத்தம் கிடைக்கும்.

'ட்ராவிட் அந்த விளம்பரத்துல வந்ததிலிருந்து. கிஸான் ஜாம்' தான் தினம் சாப்பிடறேன்... இட்லிக்குத் தொட்டுக்க.. அம்மா தெண்டம்னாலும் அழுது புரண்டு ஒரு பாட்டில் வாங்கிடுவேன்...'' பீற்றினார்கள்.

'அதிசய உலகின் ஆலிஸ்' போல கண்மலர்த்தி வியப்பாள் புனிதா. அவர்களின் இளமை உணர்வுகளும், புகாத அளவு இது ஒரு மூடிய உலகம் வெளியே போகலாம்தான்... ஆனால் எதற்காய் எங்கு போக வேண்டும் என்று கூட புரியாத நிலையில் அவள் இந்த மடத்தினுள்ளே மகிழ்ச்சியாகவே இருந்தாள்.



உயர்ந்த கற்சுவர்களின் பின்னே தனக்கென்று
வட்டத்தை அமைத்து அலுப்பின்றி அதனுள் சுற்றினாள்.

காவலுக்கென உள்ள 'செக்யூரிடிகள்' இருவரைத் த
வேற்று ஆண் வாடை கிடையாது. அறுபதுக்கு மேற்பட்ட அ
இருவருக்கும் காதும் கண்ணும் மந்தம்.

'இவர்களால் தங்களையே பார்த்துக்க முடியாது. நமக்
பாதுகாப்பாம்.. ஹூம்..''

''வாட்டசாட்டமா இளவட்டங்களைப் போட்
உங்கிட்டேயிருந்து அவனுங்களை யாரு பாதுகாக்கறதாம்?

'கிக்கிக்' என்று கூட்டமாய் சிரிக்க, புனிதா முகம் சி
விலகுவாள்.

இங்கும் பொது அறையில் தொலைக்காட்சி பெட்டி உ
நல்ல திரைப்படங்கள் அல்லது நிகழ்ச்சிகளின் போது
உயிர்பெறும். ஆனால் புனிதா இத்தகு பொழுதுபோக்குக
தன்னை கரைக்க விரும்பவில்லை. அவள் பொழுது சி
கிளேருடனேயேக் கழியும். அவர்களுக்கு வாதநோய் என்ப
தினம் இரவு வெந்நீர் ஒத்தடம் தடவி, எண்ணெ
பிடித்துவிடுவது அவள் விரும்பி ஏற்ற பணி.

அந்நேரம் எழுபது வயதான சிஸ்டர்
அனுபவங்களைக் கதை போலச் சொல்ல ஆர்வ
கவனிப்பாள்.

உயர்நோக்குடன் அமைந்த வாழ்க்கை. அ
அனுபவங்கள். அதன் மூலம் கற்ற பாடம் என்று
உன்னதத்தைக் கேட்காமல் பாட்டு கூத்து என்று அப்பெட்டி
முன் கட்டுண்டு கிடப்பதில் சுகமில்லை என்பது அ
நினைப்பு. இதையே புனிதா வாய்விட்டு சொல்லி
முடியாது.திரைப்படங்களும் அவற்றின் நாயக, நாயகிய
வாழ்வின் உச்சங்கள் என்று மயங்கும் கூட்டம் இவ
கம்பெடுத்து அடிக்க வரும்!

புனிதா தபால் மூலம் பட்டப்படிப்பைத் தொடர்ந்து கொண்டிருந்ததால் பள்ளியின் மற்ற மாணவிகள் அவளை 'அக்கா' என்றே அழைத்தனர். நேர்த்தியாய் அவள் உடுத்தாவிட்டாலும் அவளது நிதானமும் புத்திசாலித்தனமும் அவளுக்கான மரியாதையைப் பெற்றுத் தந்திருந்தன.

பாடங்களை விளக்கி, ஆலோசனை தந்து, சின்ன வேலைகளில் உதவுபவள், சிறுபிள்ளைகளை இழுத்து வைத்து பேன் உருவி, குளிப்பாட்டியும் விடுவாள். ஆக எல்லோருக்கும் புனிதாவைப்பிடிக்க, அவளுக்கும் பள்ளி வளாகமே உலகமாய்ப் போனது...

வெளியே இருப்பது கொடிய உலகம்... அதில் அப்பாவிப் பெண்களைச் சின்னாபின்னமாக்கக்கூடிய கொடும் மனிதர்கள் அதிகம் என்ற பயம் ஊறியிருந்தது.

"புனிதாக்கா... உங்களை சிஸ்டர் கூப்பிடறாங்க. ஆபீஸுல இருக்காங்க."

கைகளைக் கழுவித் துடைத்தபடி விரைந்தாள்.

அலுவலகத்தில் சொன்னதைச் செய்ய மூன்று அலுவலர்கள் இப்பினும் சிஸ்டர் இவளைத்தான் அழைத்தபடி இருப்பார்கள்.

"அட்மிஷன் பைலை எடும்மா புனிதா."

"போன ஆண்டு விழாவப்ப வாங்கின டான்ஸ் டிரஸ்ஸை எங்கே வைச்சோம்?" என்று ஏதாவது சின்ன விசாரிப்பு.

இவளும் உற்சாகமாய் செய்வாள்.

இடதுபுறமிருந்த இசை அறையில் பியானோ இசை கசிந்தது. சன்னமாய் அந்த கிறிஸ்தவ கீர்த்தனையை வாசிப்பது யாராய் இருக்கும்? இதை இங்கு யாரும் போட்டு கேட்டதில்லை... ஆக வெளியாள் யாரேனுமா?

சற்று மூளையைக் கசக்கி அது என்ன பாட்டு என்பதை நினைவிற்குக் கொண்டுவந்தாள்.



ஆ... அம்பர உடம்பரமும் புகழும் - திரு.

ஆதிபன் பிறந்தார்.

அமலாதிபன் பிறந்தார்.

இரு கிறிஸ்துமஸ் கால பாட்டு. ஆக மற்ற மாதங்களி கேட்க வாய்ப்பில்லை. கிறிஸ்துமஸ் பாட்டின் உற்சாக தொற்றிக்கொள்ள அதைச் சின்னக் குரலில் பாடியப அலுவலகத்தில் நுழைந்தாள்.

கல்தரையும் கல்சுவர்களுமாய் எழும்பி நின்ற அவ்வள சற்று இருட்டடித்தது. அதுவும் வெளிச்சத்திலிருந்து உள்ே நுழைந்தவளுக்கு சற்று நேரம் அத்தனையும் நிழலாகே தெரிந்தது.

அன்று மின்சார வெட்டு என்பதால் செயற்கை வெளிச்ச மில்லை. இடப்புறம் கோப்புகளோடு கணக்கரும், வலப்பு செயலாளருக்குமான அமைப்பு. மூன்று கல்படிகள இறங்கினால் சிஸ்டரின் நீண்ட மேசை இருக்கும். துள்ளலே இறங்கினாள்.

அங்கு சிஸ்டர் மட்டும் இல்லை எனப் புரிந்ததும் பா வார்த்தைகளை அவசரமாய் விழுங்கினாள்.

அவளுக்கு எதிர்புறத்தில் ஆளுயரக் கண்ண ஜன்னல்கள் வர்ணமாய் மினுமினுத்தாலும் அவற்றின் வழி வந்த மங்கிய ஒளியில் அவளுக்கு உள்ளே இருந்தவர் இன்னார் என்பது தெரியவில்லை.

ஆனால் வர்ண வெளிச்சம் அவளைத் தேவதைய காட்டியது. மங்கிய மிடியும், வெள்ளைச் சட்டையும், இறு பின்னலுமாயிருந்த இளம் தேவதை...

"மன்னிக்கவும் சிஸ்டர்... நான் யாருமில்லைன்னு..."

"வா புனிதா. இது சிஸ்டர் தியாகராஜன். தொழிலதிபர். இ குடும்பத்தார் நமக்கு- அதாவது இந்த கான்வென்ட்டு

ஏகப்பட்ட உதவிகளைச் செய்திருக்காங்க. அவர் இப்ப நம்மகிட்ட ஒரு உதவி கோரி வந்திருக்கிறார்... அதை உம்மூலமாய் செய்யக்கூடுன்னு எண்ணி நானும் சம்மதிச்சாச்சு... அதாவது நீ மறுக்க மாட்டேங்கிற தைரியத்துல... என்ன மகளே?''

''ஆ... சரி சிஸ்டர்... கண்டிப்பா.''

''நீ இரண்டு மாசம் போல கன்னியாகுமரி போய் இருக்கணும்ப்பா. மிஸ்டர் தியாகுக்கு ஏழு வயசுல ஒரு பையன் உண்டு. பேரு வினோதன். தாயில்லாத அவனைக் கவனிக்க, படிப்பில் உதவ, நல்ல வழி நடத்த நம்ப உதவி தேவையாயிருக்குது. பெண் பிள்ளை இல்லாத வீட்டுல, இதுவரை ஹாஸ்டல்ல இருந்த பிள்ளையை விடுமுறை சமயத்திலேனும் பாசமாய் கவனிச்சுக்க யாரேனும் வேணுமே? உனக்குப் பிடித்தமான வேலை... உனக்குப் பொருத்தமான பொடியன்... என்னம்மா சொல்றே?''

விஷயத்தை கிரகித்தவள் விக்கித்து நின்றாள்.

'இந்த மடம் போதும். வெளியுலக சங்காத்தமே வேண்டாம்' என்று நினைத்த நாழிகையில் இது என்ன சோதனை?

இரு மாதங்களுக்கு வெளியூரா?

அதுவும் யாரென்று தெரியாதவர்கள் வீட்டில் பெண்கள் அற்ற சூழலில்...

சிஸ்டர் அருகே நின்ற நபரைக் கண்களை இடுக்கிப் பார்த்தாள். இதயம் ஒரு கணம் நின்றேபோனது! அது சுதாரித்து மறுகணம் துடிக்க ஆரம்பித்தது. அவள் ஆரோக்கியமான இளம் பெண் என்பதால்தான்... இதுவே ஒரு கிழட்டு இதயமாயிருந்தால் நின்றே போயிருக்கும்!






இருந்த சொற்ப உடைகளை பெட்டிக்குள் அடுக்கியவ
விரல்கள் வியர்த்து நடுங்கின.

கேட்டதே கேட்டார்கள்... சிஸ்டர் தன்னைத் தனி
கூட்டிப்போய் கேட்கக்கூடாதா? அந்நியர் முன்னா கேட்பது

சரி. இதொன்றும் பெண் பார்க்க வந்தவர்கள் மு
'என்னம்மா... பையனைப் பிடிச்சிருக்கா?' என்பதளவி
பெரிய விஷயமில்லைதான். இரண்டு மாதங்களுக்கான வே
இடையே பிடிக்கவில்லை எனில் திரும்பவும் செய்யலாம்.

ஊகூம்... அது மரியாதையில்லை. தாயாய் தன்
பராமரிக்கும் சிஸ்டர் தந்த வாக்கிற்கு மாறாய் நடப்
முறைக்கேடு... ஆக இரண்டு மாதங்களை ஒரு விடுமு
அல்லது மாற்றாய் கருதி கழிக்க வேண்டியதுதான்.
பரிட்சைகளும் முடிந்து விட்டதால் சாக்கு சொல்
போக்கில்லை!

ஆனால் அந்த ஆளுடன் தன்னை அனுப்ப எப்படி சி
துணிந்தார்கள்? பார்த்ததும் தனக்கு உதறிவிட்டதே..?
சிவந்த கண்கள் தன்னை முழுக்க உறிஞ்சுவது போலவ
வெறித்தன? அதிலும் அந்தக் கோணல் சிரிப்பு அ
காமாந்திரன் என்றதே..?

இவனுடன் இரு மாதங்களா..? உடம்பும் உள்ளத்
சேர்ந்து பதறியது.

''சீக்கிரமாய் கிளம்பணும்மா புனிதா. தியாகுவும்
வேலையைக் கவனிக்கணும். இருட்டறதுக்கு முன்ன நீயு

இடத்துக்குப் போயிட்டாதான பார்த்து பழகி, இருக்க வசதி.. பெட்டி அடுக்கினதும் மேட்ரன், சிஸ்டர் மரியான்னு எல்லார் கிட்டயும் சொல்லிடு. இனி உன் வேலையும் சேர்த்து அவங்க தான் பகிர்ந்து செய்யணும்...''

தலையை உருட்டிவிட்டுக் கிளம்பினாள்.

''போறப்ப பியானோ அறையில் இருக்கிற வினோதனையும் பார்த்திடு மகளே. அருமையான குழந்தை. இந்த வயசுல பத்து கீர்த்தனையும் வாசிக்கிறானாம். படிப்பிலேயும் கெட்டியாம்...''

திரும்பிய தன் முதுகை அந்த சிவப்பு விழிகள் துளைப்பதை உணர்ந்தாள். படியேறிய பாதம் இடறியது. சிஸ்டரைப் போகும் முன் தனியே பார்த்து பேச முடியாதா? இப்படியா இரக்க மின்றி தன்னைத் துரத்துவது போல அனுப்பிவிடப் போகிறார்கள்?

'போகிறாயா... சம்மதமா?' என்று கரிசனையாய் ஒரு கேள்விகூட இல்லாமல்.. கண்ணீர்மல்க வெளியேறினாள். ஆழ மூச்செடுத்துத் துக்கத்தை விழுங்கினாள்.

பெற்றோர் முகமே அறியாத அநாதையான தனக்கு இதுவரை இத்தனைப் பாதுகாப்பான வாழ்வு கிடைத்ததே பெரிது. இதில் தன் சம்மதம் அறிந்து, நோக்கம் புரிந்து என்றெல்லாம் எதிர்பார்ப்பது தவறு. தவிர, இது கடவுள் சித்தத்தின் படி நடக்கத் தங்கள் வாழ்வை ஒப்புவித்த கன்னியாஸ்திரிகள் வாழும், நிர்வகிக்கும் பள்ளி. இங்கு பெரியவர்கள் எடுக்கும் முடிவுதான். கலந்தாலோசிக்கும் பழக்கமில்லை.

முதியவர்களுக்கே இந்நிலை எனில் தனக்கு...? இப்படி தன் மனதைத் தேற்றியவள் இசை அறையுள் நுழைந்தாள்.

பியானோவிற்கான உயர முக்காலியில் அமர்ந்திருந்த சிறுவனின் முதுகுதான் தெரிந்தது என்றாலும் அழகான குழந்தை என்பது முதல் பார்வைக்கே புரிந்தது.



''வினோதன்..''

இவள் அழைப்பில் திரும்பி விழிமலர்த்தினான்.

புனிதா பிரமித்துப்போனாள்.

எத்தனை நிர்மலமான பார்வை... பாலில் மிதக்கு கருந்திராட்சைப் போன்ற கண்கள்... தந்தையின் கொடும் சிவப் கண்களில் சாயலே இல்லாமல்...''

''நான்.. நான் புனிதா... உன்னை கவனிச்சிக் கான்வென்டிலிருந்து வரேன்...''

''நீங்க சிஸ்டரா?''

கேள்வியுடன் அவளை மேலும் கீழுமாய் ஆராய்ந்தா பொடியன்.

''இல்ல.. கன்னியாஸ்திரி இல்ல... வெறும் புனிதா...''

''ஆனா நான் உங்களை அப்படிக் கூப்பிட முடியாதே... மி புனிதா சரியா?''

''சரி மாஸ்டர் வினோதன்.''

''ஊகூம்... வினுன்னு கூப்பிடுங்க. அதான் சின்னத செல்லமா இருக்குது...''

''உனக்குப் பிடிச்சது போலவே அப்படியே கூப்பிடறே அருமையாய் பியானோ வாசிச்சே...''

''நிஜமாகவா? கேட்டீங்களா?''

''கேட்டதாலதான் சொல்றேன்.''

''என்ன பாட்டு போட்டேன்.''

''கிறிஸ்துமஸ் பாட்டு... ராகத்தை 'ஹம்' செய்தாள்.

''நல்லாப் பாடறீங்க... நான் பியானோ போட சேர்ந் பாடுவீங்கல்ல?''

“ஓ... நீ எங்கே கத்துக்கறே வினு?”

“ஏற்காடு ஸ்கூல்ல படிக்கறேன்ல... ஸர் பீட்டர் சொல்லித் தருவார்.”

“முணாப்பு போறியா?”

“அப்பா சொன்னாங்களா?”

“இல்ல... ஒரு உத்தேசம் தான். இப்ப நான் பெட்டி அடுக்கித் தயாராகணும் எங்கூட வர்றியா... இல்ல இங்கேயே இருக்கறியா?”

“அப்பா என்னை ஐஸ்கிரீம் சாப்பிட கூட்டிட்டுப் போறேன்னாங்க... அப்புறம் அவங்களுக்கு பாங்க்குல வேலை இருக்குமாம்... நான் சும்மா அவங்ககூட இருக்கிறேனே...?”

கெஞ்சலாய் அனுமதி கேட்ட சிறுவனை பரிவுடன் பார்த்தாள். தகப்பன் எப்படிப்பட்டவனாய் இருப்பினும் பிள்ளைக்குத்தான் எத்தனை பாசம்....

“தாராளமாய்... அதுக்குள்ளே நானும் தயாராகிறேன்.”

கையிலிருந்த டிரங்க் பெட்டி, பையை வாங்கும் சாக்கில் அவன் இவளது விரல்களை தடவ, பதட்டமானாள். இப்போதே சிஸ்டரிடம் சொல்லிவிடலாம்தான். ஆனால் அவர்கள் தந்த வாக்கு என்னாவது? அவர்கள் இதுவரை தனக்குச் செய்ததெல்லாம் மறந்து நன்றி கொன்றவளாய் ஆகாதா?

விடை பெறுவதற்காய் அவர்கள் முன் மண்டியிட்டாள்.

“ஏம் மகளே கண்ணு கலங்குது? இது உன் நல்லதுக்குத் தானே? வெளி உலகம் பரந்தது... அதை நீ பார்த்துப் புழங்காமல் நானும் கன்னியாஸ்திரிதான் ஆவேனுங்கறது தப்பு. நான் அதுக்குச் சம்மதிக்கறது முறைகேடு. கர்த்தர் ஒவ்வொருத் தருக்கும் ஒவ்வொருபணி நியமிச்சிருக்கார். அது புரிஞ்சு முடிவு எடுக்கணும். இது உனக்குத் தேவையான மாற்றம். குண்டுச்



சட்டியை விட்டு வெளியேறி ஒரு சுற்று சுற்றிடு... அப்புறம் ஒ முடிவு எடுத்தால் எனக்கும் முழு திருப்தி...”

முத்தாய்ப்பாய் இவள் நெற்றியில் சிலுவை வரைந்தார்க

கடைசியாய் தன் கூஸ் வாத்துக்களைப் பார்க்க போனதுபோது வினோதன் ஓடிவந்தான்.

“போலாமா மிஸ்.”

“நான் தயார்தான்.”

“எங்க ஸ்கூல்ல கூட ‘கூஸ்’ உண்டு... ஆனா இப் வெளியே சுத்தாது. நான் தொடலாமா?”

“வேணாம் வினு... அதுங்க கோவக்கார பறவைங கொத்திடலாம்.”

“அப்ப உங்களை...”

“நான் அதுங்க சிநேகிதியில்லையா?”

“இனி நீங்க எனக்கும் சிநேகிதியா மிஸ்? உங்க பார்த்தா கண்டிப்பான டீச்சர் மாதிரியே இல்லை. பாவம் அப் உன்னை நல்லா அடிச்சு கண்டிக்கற டீச்சராய் பார்க்கறே சொல்லி அழகான மிஸ்ஸை பிடிச்சிருக்காங்க!” பளிங்க சிரித்தான்.

இவள் தடுத்தும் விடாமல் இவள் பையை வாங்கியவன் அருகே வந்ததும்.

“ஒரு நிமிஷம் பியானோவை ரெண்டுத் தட்டு தட்டி வர்றேன்.” என்றபடி மறுபடி பையை இவளிடம் தந்துவி ஓடவும்தான். புனிதாவிடமிருந்து வருடலாய் பொருட்க பிடுங்கினாள் இவளது புது முதலாளி.

“வினு முன்ஸீட்டில்தான் உட்காருவேன்னு அ பண்ணுவான். ஆக உன்னை எம்பக்கத்துல வைச்சு பார்த்து வர்ற சுகம். இன்னைக்கில்ல...” பெருமூச்சுடன் கதவைத்தி அவளை உள்ளே அமரச் செய்ய இவளுக்கு மூச்சடைத்த

இதென்ன கொடுமை...? இப்படி வெளிப்படையாய் வழிபவனுடன் இரு மாதங்களை எப்படி?

கண்கள் தளும்பின. முயன்று வழியவிடாமல் அடக்கினாள்.

"தைரியமா, சந்தோஷமாயிட்டு போய்வரணும் மகளே..." கன்னம் தட்டி வழியனுப்பினார்கள் சிஸ்டர்.

அன்னப்பட்சி போல அலுங்காமல் புறப்பட்டது கார். நெரிசலான சாலைகளைவிட்டு நெடுஞ்சாலைக்கு வந்தது. குளிர்பதனம் செய்யப்பட்ட வாகனத்தில்இனிய வயலின் இசை. ஆனால் எதையும் ரசிக்கும் மனநிலை அவளுக்கில்லை. பின்புற சாலையைக் கணிக்கும் கண்ணாடியின் வழியே அவன் தன்னையே உறுப்பதை உணர்ந்தவள். கதவோரம் ஒண்டினாள். வினு கேட்ட கேள்விகளுக்கு வெறுமே 'உம்' கொட்டினாள்.

"என்ன மிஸ், எல்லாத்துக்கும் 'உம்' முனே சொல்றீங்க..."

"டீச்சர் கவனம் உம்மேல இல்லியேப்பா... பேசாம 'கம்'னு வா."

தகப்பனது அதட்டலில் அடங்கிய பிள்ளை சற்றைக்கெல்லாம் தூங்கிவிட அரை மணி நேரத்தில் விசாலமான அக்கல் வீட்டின் முன் கார் நின்றது.

பாய்ந்தடித்து கார் கதவை திறக்க வரும்முன் மறுபக்க கதவு வழியே வெளியேறினாள்.

"வாங்க மிஸ்... உங்க அறையைக் காட்டறேன்."

அதற்குள் தோட்டக்காரன் போலிருந்த ஒரு ஆள் ஓடிவந்து இவளது பெட்டியைத் தூக்கிக்கொள்ள, வினுவைத் தொடர்ந்தாள். நல்லவேளை முதலாளி உரசியபடி பின் தொடரவில்லை... நாட்கள் இவரைத் தவிர்ப்பதிலேயே போய்விடுமோ... கவலையுடன் நடந்தாள்.

தூரத்தே கடலின் ஆர்ப்பரிப்பு கேட்டது.



வீட்டின் அமைப்பு கம்பீர அழகுடன் இருந்தது.

முதலாளி இத்தனை உயர்ரக ரசனையுடையவர தெரியவில்லையே...

"இதுதான் மிஸ் உங்க அறை - என்னுது அடுத்தது."

"ஓ...? பிரமிப்புடன் பார்த்தாள். "இத்தனை பெரிய அ எனக்கு அவசியமில்லையே வினு... ரொம்ப அலங்காரம வேற இருக்குது. முக்கிய விருந்தாளிங்க வந்தா தங்கு போல..."

அறையின் தரை முழுக்க கருநீல கம்ப போத்தியிருந்தது. ஜன்னல்களில் இளநீல திரைச்சீலை கடற்காற்றோடு வெகு சல்லாபமாய் அசைந்தன. சுற்சுவர்க வெள்ளிச் சட்டமிட்ட உயர்தர ஓவியங்கள். அகலக் கட்டி அரையடி உயர மெத்தை. வழுவழுப்பான படுக்கை விரிப்பு கிரிஸ்டல் பூஞ்சாடிகள்.

கான்வென்டில் இவளது அறை புறாக் கூ போன்றிருக்கும் அதையே பெருமையாய் கழுவி, துடை வைப்பவளுக்கு இது மலைப்பு தந்தது.

"இது... இதையா எனக்குன்னாங்க?"

"நம்பாட்டி நீங்களே வந்து அப்பாவைக் கேளுங்க மி

"இல்ல... வேணாம்" ஆமையாய் சுருங்கினாள்.

"எப்படியும் அப்பாவைப் பார்த்து பேசணுமில்ல நீங்க"

"இப்பத்தான பார்த்தோம்?"

"எங்க?" புருவம் சுருக்கினான் சிறுவன்.

"காரிலே அவரோடத்தானே வந்தோம் வினு..."

"ஐய... அது டிரைவர் கோபி... அப்பாவை நீங்க அ பார்க்கவே இல்லையா?"

ஒரு புறம் நிம்மதியாயும் மறுபுறம் திகைப்பாயும் இருந்தது. ஆக அச்செங்கண் கயவன் தன் முதலாளி இல்லை... ஆனால் முதலாளி முகம்கூட அறியாமல் வேலைக்கு வந்திருக்கிறேனே.. இப்படி செல்வாக்கான இடத்தில் முகமறியாத முதலாளியின் கீழ் சுயபரிதாபத்தில் அவள் கண்கள் மறுபடியும் கலங்கின.



"அப்பா! எங்க மிஸ் வந்திருக்காங்க..."

நின்றபடி கோப்புக்களில் கையெழுத்திட்டுக் கொண்டிருந்தவன் நிமிர்ந்தான்.

புனிதா வெறித்தாள்.

அக்கம்பீர கண்கள் தன் மீது பட்ட நொடியில் தானாய் அவள் கரங்கள் குவிந்தன.

"தெரியும். கான்வென்ட்ல சந்திச்சோம் வினு."

"அப்படியா? ஆனா மிஸ் நம்ப டிரைவரைத்தான் நீங்கன்னு நினைச்சிட்டிருந்தாங்க..."

சிறுவனுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

அதைப் பார்த்த தகப்பனும் புன்னகைத்தான்.

புனிதாவின் நெஞ்சு எம்பித் துடித்தது.

இப்படி ஆறடி உயரத்தில் கண்ணியமும் கம்பீரமும் கலந்த ஆண்மையை இப்படி நேருக்கு நேராய் காண நேர்ந்த பதட்டத்தில் இருந்தாள்.



"ஓ... பள்ளி ஆபீஸ் இருட்டாயிருந்தது. சிஸ்டரு மறுபக்கம் உட்கார்ந்த எம்முதுகை அவங்க பார்த்திருக்க போல..."

குரலில் நகைப்பிருந்தது. அதன் கரகரப்பிலும் இனிமை.. பூனையின் சொர சொரப்பான நாக்கு வருடும் சுக

பட்டிக்காட்டானது மிட்டாய் கடை பார்வை தன் என்பதை உணர்ந்து தலைகவிழ்ந்தாள்.

"உன் அறையைப் பார்த்தியா புனிதா?"

"ம்ம்... ஆமா சார்."

"வசதியாயிருக்குதா?"

"ரொம்ப வசதி. வேலைக்காரிக்கு இத்தனை ஆடம்பர அறை அவசியமில்லை" மனதின் எண்ணங்கள் படபட வார்த்தைகளாயின.

"உன் சம்பளம் எவ்வளவு புனிதா?"

தன் பெயர் அவன் நாவில் புதுமையாய் கேட்டது.

"தெ.. தெரியாது சார்..."

"சம்பளத்தைப் பற்றி பேசாம... ஏன் யோசிக்காமகூட உ வந்திருக்கும் உன்னை வேலைக்காரியாய் நாங்க கருத அதன் அடையாளந்தான் அந்த அறை..."

"நன்றி சார்."

"இப்ப நீங்க ரெண்டு பேரும் சாப்பிடப் போங்க."

"நீங்கப்பா?"

"இந்த வேலை முடிஞ்சதும் வர்றேன் வினு."

**சா**ப்பாட்டு மேசையில் விதவிதமான பதார்த்தங்க கண்களால் மட்டும் விழுங்கியபடி அமர்ந்திருந்தாள். தொண்

அடைந்திருந்தது. உணவு இறங்கவில்லை. புடலங்காய் பொரியலைக் கண்டதும் சிஸ்டரின் நினைப்பு வேறு...

'வெறுமே புடலங்காக் கூட்டு மட்டுமே சாப்பிட்டவ அதுதான் விருந்துன்னு சாதிக்கக் கூடாது மகளே. இதுதான் எனக்குப் பிடிக்குன்னு சொல்றதுக்கு முன்னே நாலு வகைப் பதார்த்தம் உண்டு அறியணும். சில காலமாவது வெளி உலகத்தை, நாலு வகை மனுஷங்களைக் கவனி. அந்த வாழ்க்கை என்ன, எப்படிங்கறதை கூட இருந்துப் பழகு... பிறகும் இதெனிக்கு வேண்டாம் தேவனுக்கும் பாவப்பட்டவங்களுக்கும் கன்னியா இருந்துதான் பணி செய்வேன்னு முடிவு செய்தா யாரு தடுப்பா உன்னை?' என்ற சிஸ்டரின் உபதேசம் காதில் கேட்கும்.

ஆறின புடலைக்கூட்டை எந்த முறுமுறுப்பும் இல்லாமல் சாப்பிட்டு திருப்தியாய் இருந்தவளை இப்படி வெளியே தள்ளி விட்டிருக்க வேண்டாம். கேட்க நாதியற்ற அநாதையாய், அனுப்பி விடத் தோதாய், மடத்தில் இருந்ததும் தான் மட்டும்தான்.

இங்கு 'பிரியாணி' வாழ்க்கை கிடைக்கக் கூடும் தான் - அதாவது சுவையும், பகட்டும், செழிப்புமான வாழ்வு - ஆனால் தனக்கிது ஜீரணமாகுமா?

இனி தன் உணவைவிட விநோதன் எப்படி, எத்தனை சாப்பிடுகிறான் என்பதைக் கவனிப்பதுதான் தன் கடமை என்பது உணர்ந்தவள், காரியத்தில் கண்ணானாள், கற்ற இடத்தில் மேசை நாகரீகமும் பரிச்சயமாகியிருந்ததால், அதன்படி விநோதனை நடத்தினாள்.

"நாப்பினை மடியிலே இப்படி விரிச்சிக்கோ வினு..."

"நேரே நிமிர்ந்து உட்கார். இடையிடையே சாலெடும் சாப்பிடணும்" அவன் வாய் துடைத்து அறைக்குத் திரும்பையில் வினு கெஞ்சினான்.

"அப்பாவைப் பார்த்துட்டுப் போலாம் மிஸ்..."



"இப்பத்தானே பார்த்தோம்."

"சாப்பிட வர்றேனுட்டு வரலியே அவங்க?"

"சரி, போய் விசாரிச்சுட்டு ஓடிவந்திடு..."

அறை வாசலில் போய் நின்றபோது, உள்ளே பேச்சுக் கேட்டது.

"வேணாம் வினு... அப்பா வேலையாயிருக்காங்க..."

"ஒண்ணும் சொல்லமாட்டாங்க."

"அப்ப சரி" சிறுவனை அனுப்பிவிட்டு வெள நின்றவளது தோளை ஒரு கை தடவியது - பதறித் திரும்பி

வெகு அருகே அச்செவ்வரி கண்கள் தெ பின்வாங்கினாள்.

"என்ன புனிதா, ஐயாவைப் பார்த்தாச்சா?"

"ஆமா."

"என்னைத்தான் முதலாளின்னு நினைச்சுட்டியா பொடியன் சொன்னான். நம்ப'லுக்கு' அப்படித்தா மட்டுமென்ன காலேஜ் பொண்ணுக மாதிரித்தான் இருக்கே

"நான் படிச்சு முடிச்சாச்சு" கறாராய் சொன்னாள்.

"ஆனா நா வெறும் டிரைவருங்கறியா? எ செய்றது..நல்லாத் தெரிஞ்ச வேல இதுதான்.. நல்ல சம் வருது. அதான் நம்ப பர்ஸனாலிட்டிக்கு ஒத்துவரலைன்ன போகுதுன்னு இருக்கேன். முதலாளியும் காக்கிச்சட்டை ம தொப்பி எவடான்னு விரட்டல. அவரோட எல்லா ஐ பார்த்தாச்சு. எங்க போனாலும் ஐயா தங்கற ஒட்டல்ல நமக்கும் ரூம்பு. தினுசு தினுசான சாப்பாடு."

அவன் குரலைத் தழைத்தான். "அதுவும் ஐயா ஒ ஆளுங்கறதால் அவரைப் பத்தி விசாரிக்கிற பொண்ணுங்க

நம்மச் சுத்தும். எனக்கு தர்ற டிப்ஸ் மூலம் ஐயாவக் கவுத்திட திட்டம் போடுவாங்க. சிலது நமக்குநூறு இருநூறுன்னு நோட்டு தந்தா, சிலதுங்க கட்டிப்பிடிச்சு முத்தம் தருங்க... குஷாலு வாழ்க்கம்மா..." கண்ணடித்துச் சிரித்தான்.

முகத்தை மேலும் கடுமையாக்கியவள் எட்டி நின்றாள்.

ஏனோ அந்நேரம் தன் நிலைக்காய் வருந்தியதைவிட வினுவின் தகப்பனுக்காக அதிகம் பரிதவித்தாள்.

இத்தனைப் பணம், செல்வாக்கிருந்தும் மனைவியை இழந்த அவரும் ஒரு தினுசாக அநாதைத்தான். அவரைக் கைப்பற்றும் முயற்சியில் சதா பெண்கள் சுற்றிவருவது.. பெரும் தொல்லைதான்! அதிலும் எப்படிப்பட்ட பெண்கள்... அவர் கார் ஓட்டுநருக்கு லஞ்சம் தந்து அல்லது முத்தமிட்டு முதலாளியை நெருங்க முயற்சிக்கும் தரமிக்க 'பெண்மணிகள்!'

உள்ளே பேசிக்கொண்டிருந்த நபர் வெளியேறியதும் அறியாமல் யோசனையில் கட்டுண்டிருந்தாள்.

"வாங்க மிஸ்..."

கைபற்றி இழுத்த வினுவைக் கன்றாய் பின் தொடர்ந்தவள் முகத்தை இயல்பாய் பார்த்த தியாகராஜனின் பார்வை மீளாது நிலைத்தது.

"என்ன ஏதும் சரியில்லையா?"

"ஒ... ஒண்ணுமில்லையே சார்..."

"மூக்கும் முகமும் சிவந்திருக்கே..."

'உங்களுக்காக மும்முரமாய் பரிதவித்துக் கொண்டிருந்தேன் ஐயா!' என்றா சொல்ல முடியும்?

இனி கண்ட நினைப்போடும் முதலாளி முன் வருவது ஆபத்து. மன உணர்வுகளை முகக் குறிப்பினால் அறியும் ஆற்றல் கொண்டவர் என்பதை தன் மனதில் குறித்து வைத்தாள்.



"கொஞ்ச நேரம் நடந்தபிறகு வினுவைப் படு போட்டுடறேன் சார்..."

"ம்ம்... காற்று அதிகம்."

"கம்பளி குல்லாய் எடுத்துக்கிட்டேன். காதுகளை மூடித் கூட்டிப்போவேன்."

"ராஜிம்மா அனுப்பின புதுக் குல்லாப்பா."

"நல்லது..." தியாகராஜன் முகம் மலர்ந்தது. "ஒரு சுற்றிட்டு படுக்கப்போ..."

"உங்ககிட்ட ஒருமுக்கியமான விஷயம் சொல்லணும்"

"சொல்லு."

"கிட்ட வாங்க..."

தகப்பனது அகண்ட தோள்களை அணைத்துத் தன்பு சாய்ந்த வினு. அவரது காதோடு கிசுகிசுத்தான்.

புனிதாவின் முகம் மேலும் சிவந்தது.

இதென்ன கெட்டப்பழக்கம்? பிறர் இருக்கையில் இ மட்டும் ரகசியம் பகிர்வது நாகரீகக் குறைவல்லவா?

இவளை ஓரக்கண்ணால் கவனித்த தியாகரா புன்னகை விரிந்தது.

"ஊகூம்... உன் 'மிஸ்' க்கு நீ இப்படி ரகசியம் சொ பிடிக்கலை பார் - எங்கிட்ட சொன்னதை உரக்கச் சொ வினு..."

"நிஜமாவா?"

கேள்வியில் குறும்பு கொப்பளித்தது.

"பின்னே, அவங்க முகம் சிவப்பா மிரட்டுதே... த போனதும் திட்டுவாங்குவே - ஆக இப்பவே சொல்லிடு

வினு வெட்கமும் தயக்கமுமாய்... சொன்னான்.

"புனிதா மிஸ் எனக்கே எனக்குத்தான் ஏன்னா அவங்களுக்கு மத்த ஆண்களைப் பிடிக்கலைன்னேன்..."

இவளுக்கு விக்கியது!

முளைத்து இரண்டு இலைகளைக் கூட முழுதாய் விடாத இந்தச் சுண்டைக்காய் என்ன பேச்சு பேசுகிறது?

"எல்லாரையும் கோபி போல நினைக்க வேணாம், புனிதா. அவனையும் எச்சரித்து வைக்கிறேன்."

"போலாமா வினு?"

மேலும் அவளை சோதிக்க விரும்பாமல் தந்தையிடம் விடைபெற்றுக் கொண்டான் பொடியன்.

பால்விளக்கு ஒளியில் தோட்டம் தனி அழகுடன் தெரிந்தது. வினுவிற்கு குல்லாவை மாட்டியவள், காலை எட்டிப் போட்டு நடந்தாள்.

"என்ன மிஸ்.. பேசவே மாட்டேங்கறீங்க?"

"எனக்குமாச் சேர்த்து நீதான் ஜாஸ்தி பேசறியே...?"

"அது நிஜந்தான்?"

இவள் கையைப் பிஞ்சு கை பற்றியது.

"எது நிஜம்னு கேளுங்களேன்."

"சரி - எது நிஜம்?"

"வர்ற எல்லாரும்... அதான் என்னைக் கவனிக்க வர்ற எல்லா 'மிஸ்'ஸும் சதா டிரைவர் அண்ணாட்ட பேசுவாங்க... இல்லன்னா 'வா உங்கப்பாவப் போய் பார்க்கலாம்'னு அப்பாட்டயே ஓடுவாங்க... உங்களுக்கு கோபி அண்ணாவைப் பிடிக்கலை... அப்பாட்ட பேசறப்பவும் சிரிக்காம 'உம்'னு இருந்தீங்க..."



"ஆக எனக்கு ஆண்பிள்ளைப் பிடிக்காது - அப்ப சா யாது?"

"நான் சின்னப்பையன்... பொடியன்! எங்கிட்ட சிரிச் சிரியமாய் பேசனீங்களே... அதான் நீங்க எனக்கே எனக்குத்தான்."

இறுகிய பாவனையையும் மீறி சிரிப்பு வழிந்துவி வினுவைக் குனிந்து முத்தமிட்டாள்.

"எல்லாம் சரிதான். ஆனா பேசறதுக்கு முன்னே கொஞ்ச யோசிக்கணும். நினைச்சதை நினைச்ச நொடியில் பேசிட புத்திசாலித்தனமில்லை."

வினுவின் கண்கள் முட்டையாய் விரிந்தன.

"என்ன எங்கப்பா மாதிரியே சொல்றீங்க? இதெல்லா உங்கப்பா உங்களுக்குச் சொல்லித் தந்ததா?"

"எனக்கு அப்பா கிடையாது வினு..."

"அப்ப... அம்மா?"

"அம்மாவும் கிடையாது..."

"எப்ப செத்துப் போனாங்க?"

நிஜமான வருத்தத்துடன் விசாரித்தான் சிறுவன்.

"எனக்கு அவங்களைப் பற்றி எதுவுமே தெரியாதுப்பா.. நா வளர்ந்தது கான்வென்டில..."

"அப்ப நீங்களும் பணக்காரங்களா?"

"காசு கொடுத்துச் சேரலைப்பா... கருணையா சேர்த்துகிட்டாங்க."

"அப்படின்னா?"

"அநாதைங்கற பரிதாபத்துல, சிஸ்டர் கிளேர் படிக் வைச்சாங்க. தவிர அது ரொம்ப பணக்கார குழந்தைகளுக்கா பள்ளியுமில்லை படிச்சபடி கைக்குக் கிடைச்ச வேலையெல்லா செய்வேன்..."

"கூஸுக்கு சாப்பாடு போட்டீங்களே. அது போலவா?"

"ம்ம்.. தபால் மூலம் பட்ட படிப்பும் முடிச்சாச்சு..."

"இப்ப என்னைப் பாத்துக்க வந்துட்டீங்க..." அவள் கையைத் தன் கழுத்தோடு இடுக்கியபடி கொஞ்சினான். - விரல்களை வருடினான். கைவழியே இதுவரை அறியாத உணர்வுக் குமிழ் ஒன்று மெள்ள அவள் தலைக்கேறியது.




கட்டுப்பாடுள்ள நல்ல சூழலில் புனிதா வளர்ந்திருந்தாளே ஒழிய பாசத்தில் அவளை யாரும் அபிஷேகிக்கவில்லை.

சிஸ்டர் பரிவுகாட்டி, பண்பான வழியில் நடத்தினார்கள். ஆனால் தலை வருடி, 'எங்கண்ணே' என உச்சி முகர்ந்ததில்லை. அவளை அலங்கரித்து 'எத்தனை அழகுடி நீ' என்று பாராட்டவில்லை.

'கூட ஒரு தோசை போட்டுக்கோ... கழுத்து எலும்பு துருத்திடுச்சு பாரு...' என்று உடன் நின்று பரிமாறியதில்லை.

இவள் வேலையின் நறுவிசை, சுறுசுறுப்பை, நாலு பேரிடம், 'எங்கட் புனிதா போல வருமா?' என்று பீற்றும் கொண்டாட்டமில்லை. அமைதியும் இயல்புமான வாழ்வில் இவள் ஒன்றி இயங்கினாள். கடமைகளை நன்றியோடு செய்தாள்.

தர்மாஸ்பத்திரியில் இவளை சுமை இறக்கியதுமே பெற்றவள் ஓடிப்போக, ஞானம் ஆயாதான், 'பாவம் பச்ச மண்ணு' என்று கையிலெடுத்தாளாம்.



அதே மருத்துவமனையில் 'மிட்வைஃ'ப்பாக பணியார்
வள் பிறந்த சிசுவை பார்த்துக் கொள்ள முடியாதெ
கான்வென்ட் உதவியை நாடியிருக்கிறாள்.

"பிறந்த குழந்தைய எல்லாம் நாங்க இங்க வளர்
முடியாதே ஞானம். மூணு வயசானதும் படிக்க சேர்த்தியா
இலவசமாய் சொல்லித் தரலாம்... அவ்வளவுதான்."

"யம்மா, இதோ நா வேலைக்குப் போனா பெரிய டாக்
எஞ்சீட்டைக் கிழிச்சிடுவாரே.. தினம் அங்க நாலு பிரசவமா
இத இடுக்கிட்டு நா வேலையப் பார்க்க முடியுமா?"

"உன்னாலேயும் முடியாது பொறுப்புதான் இது. அனா
விடுதியில சேர்ந்திடுவோம்."

"ஐயோம்மா.. எத்தனை அழகு பாருங்க... பூ பொம்
யாட்டம்! நாலுவேளை பாலு கரைச்சுத் தந்த எனக்கு தூக்கித்
மனசாவலையே..."

கான்வென்ட்டில் தோட்ட வேலை செய்த ஐசக் தாத்தா
அவர் மனைவியும் மனதிரங்க, புனிதாவுக்கு அவர்க
ஓலைக்குடிசையில் இடம் கிடைத்தது. அனைவர் பராம
பிலுமாய் மண்ணுக்குள் போக, சிஸ்டர் கிளேர் மட்டு
பொறுப்பு என்ற நிலை வந்தது.

எடுத்து வளர்த்தவர்கள் வயதான ஏழைகள். பாலு
மனமிருந்தாலும் சீராட்ட வலுவற்றவர்கள். ஆக புனிதா ஓடி
உழைத்தாள். எட்டு வயதிலேயே சாதம் வடித்து, குழ
வைப்பாள். வளர்த்தவர்கள் சீக்காய் படுத்திருந்தபோது, க
கஷாயம் என்று தந்து பராமரித்தாள்.

"கர்த்தராய் பாத்துத்தாம்மா உன்னை எங்களுக்
தந்திருக்காரு.."

அம்முதிய கண்கள் பொங்கிடும்.

பின் பள்ளியே வீடாக, சகவயதுப் பெண்களிடை
சந்தோஷமாய் சுற்றிவந்தாள். ஆர்வமாய் படிப்பும், இசை

கற்றாள். சொச்ச வாழ்க்கையை இங்கேயே சேவையிலும் கல்வியிலுமாய் கழித்துவிட முடிவெடுத்தவளுக்கு முளைத்தது இப்புது பிரச்சினை...

முளைத்ததோடு விஸ்வரூபம் அல்லவா எடுத்துவிட்டது!

'ஜாக் அன்ட் த பீன் ஸ்டாக்' கதையில் இரவு விதைத்தது விடியலில் மேகம்வரை ஏறியிருந்தது போல!

படுத்தவளை உறக்கம் நெருங்கவில்லை. படுத்த சில நொடிகளில் கண்செருகுபவள், இன்று புரண்டு தவித்தாள். மிக சுகமான மெத்தையும், வீச்சமடிக்காத, தலையை மிருதுவாய் உள்வாங்கிய தலையணையும் அச்சுறுத்தின.

சாட்டின் போர்வையின் வழுவழுப்பு உறுத்தியது... உள்ளத்தை!

**கா**லையில் விழித்தவளை மறுபடி வசதிகள் உறுத்தின. தகர வாளிகளின் கரகரப்பும், தண்ணீரில் ஓசையையே அமுக்கும் பெண்களின் பேச்சும் அற்ற அமைதியில், பளிங்கு குளியலறையில் குளித்தாள்.

சிவப்பு குழாயைத் திருக, ஆவி பறக்கும் வெந்நீர் வந்தது.

சோப்பு, ஷாம்பூ கிரீம், பவுடர் வகைகள் புத்தம் புதுசாய் நின்றன.

நிதானமாய் குளித்தபின் வினுவின் அறைக்குப் போனாள். அவள் நீட்டிய பாலை அருந்தியவன் அழைத்தான்.

"வாங்க மிஸ் - பீச்சுக்குப் போகலாம்."

"கடல் பக்கத்திலதான இருக்காம்?"

"அலை பக்கத்துல போகலாம்."

"இப்ப எதுக்கப்பா?"

"வெயில் இல்லாம சுகமாயிருக்கும்."



"உங்கப்பாட்ட இதுபற்றியெல்லாம் கேட்க மறந்துட்டேன் என்னென்ன எப்பப்ப, செய்யணும்னு சொன்னார்னா அதுப செய்திடலாம்."

"அப்பா யாரையும் அது செய்... இது செய்யன்னு சொ மாட்டாங்களே..."

"அப்ப நீ எழுந்ததும் முட்டி போட்டு ஜெபம் செய்தியே, அ அப்பா சொல்லித்தானே?"

முழங்காலில் கண்மூடி கடவுளைத் துதித்துவிட்டு த நாளைத் துவக்கிய சிறுவனை நெகிழ்வுடன் கவனித்திருந்த கேட்டாள்.

"இத்தனை நல்ல உலகத்தில் நம்மை ஆரோக்கியமு உயிருமாய் வைத்திருக்கிற கடவுளுக்கு நன்றி சொல்லணும்னா அவங்க ஏன் ஜெபம் பண்றார்னு நான் கேட்டபோது சொல் நானும் அப்படியே பண்றேன்... அப்பா இப்படி செய்யணும் சொல்லலியே..."

ஆச்சரியமாய் கவனித்தாள்.

கட்டுப்பாடான வாழ்வில் வளர்ந்தவளுக்கு இது விநோ தான். கட்டுத்திட்டங்கள் இல்லாமலேயே மகனை நல் முறையில் வளர்த்திருக்கிறாரே முதலாளி?

"எப்போதிருந்து தனி அறையிலே படுத்துக்கறே வினு?"

"பேபியா இருந்தப்ப அப்பாகூடத்தான்... அப்பாவுக் நிறைய பிரெண்ட்ஸ்... ராத்திரி முழுக்க பேசுவாங்க... நானு முழிச்சிருந்தா ஸ்கூலுக்கு நேரத்துக்கு போக முடியாதுன் சீக்கிரம் படுக்கச் சொல்லிடுவாங்க.. வர்ற லேடீஸ் கூட 'பா வினு'ன்னுவாங்க. ஆனா, அவன் தூங்கட்டும் - அதா நல்லதுன்னுடுவாங்க அப்பா."

புனிதாவிற்கு 'சுருக்' கென்றது.

ஆகப் பெண் சிநேகிதிகளுடன் தனியே இருக்க விரும் மகளைத் தனித்து படுக்கப் பழக்கியிருக்கிறார்!

“நிறைய பொண்ணுங்க இங்க வர்றதுண்டா வினு?”

மெள்ள நோண்டினாள்.

“எல்லா மிஸ்ஸும் இப்படித்தான் அப்பாவப் பத்திக் கேப்பாங்க...”

‘கப்’ பென்று வாய் மூடினாள்!

ஆறு வயதில் ‘கடவுளின் முத்தம்’ என்றொரு புத்தகம் எழுதியிருக்கிறானாமே ஒரு ஊமைக் குழந்தை? இக்கால சின்னதுகளுக்கு பெருத்த அறிவு! யோசிக்காமல் பேசினால் ஆபத்துதான் எனப் புரிந்து பேச்சைக் குறைத்தாள்.

படிப்பிலும் வினு குட்டிகை.தினம் காலை இரண்டு மணி நேரம், மாலை இரண்டு மணி நேரம் படிக்க வைத்தாள்.

பாட்டு, இசை, விளையாட்டு, கைவேலை என்று சொச்ச நேரம் கரைந்தது.

கிடைத்த நேரத்தில் வீட்டைப் பராமரித்தாள்

புதுப்புது தினுசாய் சமைத்தாள். மடத்தில் வெங்காயம் மூழ்கிவதங்குமளவு எண்ணெய் கிடைக்காது. தேவையானதில் பாதியளவையே வைத்து சமைக்க, போதுமான சுவையும் அமையாது.

நன்கு சமைத்து விநோதன் வயிறு நிரம்பச் சாப்பிடுவதைக் கண்டதும் திருப்தியாயிருந்தது.

தியாகராஜனை தினம் பார்க்கும்படி நேரவில்லை.

ஒன்றரை கிலோமீட்டர் தொலைவில் சில ஏக்கர்களை வாங்கிப் போட்டு, அதில் நவீன வசதிகளுடனான ஓட்டல் கட்டுவதாய் காதில் விழுந்த பேச்சுக்கள் மூலம் யூகித்தாள்.

வெளிநாட்டினர் தங்கும் வகையிலான நட்சத்திர அந்தஸ்துள்ள விடுதி என்பதால் முனைப்பாய் கட்டிட வேலையில் மூழ்குவதற்காகவே, மகனை தன் வசம் ஒப்படைத்திருக்கிறார் என்பது புரிந்தது.



அவர் மனைவி உயிரோடு இருந்திருந்தால் கணவ
காரியம் யாவிலும் கைக்கொடுத்து கூடவே தகப்பனுக்
பிள்ளைக்கும் நடுவே பாச பாலமாய் நின்றிருப்பாள்.

இப்போது பிள்ளையை வேற்றாள் பொறுப்பில் விட்டுவி
உழைக்க வேண்டிய நிலை.

தான் வேற்றாளாய் இல்லாமல் நிஜமான பாசத்துட
வினுவைக் கவனிக்க முடிவு செய்தாள்.

ஆனால் முதலாளியுடன் இருக்க நேர்ந்த பொழுதுக
சிற்சில உரசல்களும் நேர்ந்தன. பணம் படைத்தவர்க
போக்கு தனக்கு எரிச்சல்மூட்டுவதை உணர்ந்து புனிதா
ஜாக்கிரதையாய் பழகினாள்.

இரு நாட்களுக்கு முன் இவள் தயாரித்த முட்டைக் குரு
புதினாத் துவையலை இருவருக்குமாய் பரிமாறியவள் உட்
தியாகராஜன் நுழைந்தார்.

“என்ன, மசாலா வாசனைத தூக்கலாயிருக்கு
சோமுவுடைய ‘வழுமொழு’ சமையல் போல இல்லை?”

புனிதா தன் முதலாளியை புது மதிப்போடு பார்த்
வாசனையிலேயே வித்தியாசம் உணரும் இவர் திறமை
வியாபாரியாகத்தான் இருக்க வேண்டும்.

மகனுக்கும் புனிதாவிற்கும் இடையே நடந்த பார்
பரிமாற்றம் கண்டதும் அடுத்த கேள்வி வந்தது.

“நீங்க ரெண்டு பேரும் கிச்சனில் புகுந்துட்டீங்களா?”

“படிப்பு முடிந்த பிறகுதான். ஒரு மாற்றமாய் இருக்க
மேன்னு–”

“ம்ம்... தப்பில்ல?”

சாப்பிட்டவன் தலை ரசனையுடன் அசைந்தது.

“எனக்குமிது நல்ல மாற்றந்தான். வினு பூகோள
கொஞ்சம் தேறணும்.”

"ஆமா சார்.. மார்க் சீட் பார்த்து அதிலே தனி கவனம் செலுத்தறோம்?"

தகவல்களைக் கேட்டபடி உணவை முடித்ததும்,

"சோமு, எனக்கு காபி... இவங்க ரெண்டு பேருக்கும் ஐஸ்கிரீம்..."

"ஹை... வாங்கிட்டு வந்தீங்களாப்பா?"

"ம்ம்... ஸ்ட்ராபெரி பெரிய பேக். மொத்தத்தையும் ரெண்டு நாளிலே காலி பண்ணிடாதே..."

மகனின் முகத்தில் விரிந்த சிரிப்பை ரசித்த தகப்பனது கண்கள் இவள் முகக் கடுமையையும் கவனிக்கத் தவறவில்லை.

"என்ன உனக்கு ஸ்ட்ராபெரி சுவை பிடிக்காதா, புனிதா?"

"அதிக இனிப்பு, வினு சாப்பிட்டுப் பழகவேணாமேன்னு பார்த்தேன். காலை டிபனோட ஜாம். கேசரி... இப்ப இதுன்னா...?"

"நான் அடிக்கடி வினுவோட உட்கார்ந்து இப்படி சாப்பிட நேர்றதில்லை... எப்போதாவது செல்லங்காட்டறது தப்பில்லை..."

"சரி...அவன் உங்க மகன்..."

"கான்வென்ட்.. அதிலும் எளியமடத்து வளர்ப்பு வேறமாதிரியானது புனிதா..."

சொன்னவனை நிமிர்ந்து நேராய் பார்த்தாள்.

"நாங்களும் வெறும் கஞ்சி வெங்காயத்தில் வளரலை..."

குரல் உயரவில்லை எனினும் மூக்கின் சிவப்பு அவள் படபடத்தைக் காட்டியது.

"அதுவும் உடம்புக்கு நல்லதுதான்... சாப்பிடறது தப்பில்லை..."

"கொஞ்சம் கண்டிப்பு அதை விடவும் நல்லது!"

அதிகம் பேசுகிறோமோ என்ற அச்சத்தை அவரது நகைப்பு அடக்கியது.



"சிஸ்டரும் உன்னை அதிகம் கண்டிக்கலை... அதா இப்படிப் பேசற..."

"மன்னிக்கணும்..."

"துடுக்கும் துடிப்பும் இந்த வயசுக்கு அவசியம். நாற்பதுச் மேல இந்தக் குணமெல்லாம் தானாய் அடங்கி, பொறுப்ட திறனுமாகும். உன் வயசுக்கு ஏற்றமாதிரி நீ நடத்துக்கறதுதா முறை - எனக்கும் பிடிச்சிருக்குது..."

புனிதமாவிற்கும் தன் பேச்சு, நடத்தை புதிராகவே இருந்த மடத்தில் சொன்னதைச் செய்யும் பேசாமடந்தையா இருந்தவள். இங்கு ஏன் குழம்பு போல தளதளக்கிறா தியாகராஜனிடம் பேசும்போது ஏனிந்த அநாவசிய படபடப்

அது அவர் பணக்காரத்தனத்தால் ஏற்பட்ட எரிச்ச அல்லது வேறேதுமா?

"ஆங்... புனிதா நாளைன்னைக்கு நாகர்கோயில் போறே நீயும் வினுவும் கூட... வரலாம்."

அவள் முகம் சூரியகாந்தி மலராய் படர்ந்து பளபளத்தத

"கான்வென்ட் சிஸ்டரைப் பார்க்க மட்டுமில்லை... இரன் முறை அவங்களுக்கு போன் செய்து உன் சவுக்கியத்தை சொல்லிவிட்டேன். இப்ப உனக்குக் கொஞ்சம் துணிமணி வாங்கணும்.."

கேள்வியுடன் பார்த்தாள்.

"மறுவாரத்திலிருந்து இங்க நிறைய விருந்தினர் வருவா ஆர்கிடெக்ட், ஷூட்டிங் குழு எல்லாரும் ஓட்டல்ல தங்கினாலு சிலர் இங்க நம்ம வீட்டில் தங்க நேரும். அவ்வப்போது விருந் நீங்க ரெண்டு பேரும் கலந்துக்கணும். அதுக்கேற்றமா உடைகள் தேவைப்படும்."

புனிதா விழித்தாள்.

"இதுவரை நான் ஏதும் வாங்கன்னு க ஏறினதில்லையே...?"

"அதுவும் ஒரு புது அனுபவமா இருக்கட்டுமே."

திரும்பி நடந்த முதலாளியின் முதுகை வெறித்தபடி நிற்கத்தான் முடிந்தது!

"சிஸ்டரை, மற்றவர்களைப் பார்க்கப்போகும் எதிர் பார்ப்பின் குதூகலத்துடன் காத்திருந்தாள். சிஸ்டருக்கு இதுவரை இரு கடிதங்கள் எழுதி, ஒரு கடிதம் பெற்று இருந்தாலும் நேரில் பார்ப்பது தனிதானே."

ஆனால் தியாகராஜன் ஷூட்டிங், பார்ட்டி என்றிருந்தது உறுத்தியது அந்த ஆர்ப்பாட்டங்களில் தானும் மினுக்கிக் கொண்டு நிற்க வேண்டுமாமே... மனம் சஞ்சலித்தது!

மடத்திற்குப் போய் பரிச்சயமான முகங்களைப் பார்த்து பேசும் வரை உற்சாகத்தில் மறைந்திருந்த சஞ்சலம் கடை வாசலில் இறங்கியதும் வலுவானது.

தியாகராஜன் அருகே போனவள் தணிந்த குரலில், "எனக்குத் தாவணி இல்ல... மிடி போட்டுத்தான் பழக்கம்... சீட்டித்துணி எடுத்துத் தந்தா நானே தைச்சுக்குவேன்..."

"நாலு பட்டுச்சேலை எடு.. மீதியை சல்வாராய் வாங்கிடலாம்."

வழக்கம்போல சுருக்கமாய் பதில் வந்தது.

"சேலை... அதுவும் பட்டா? நான் வாங்கிக்க முடியாது!"

"சிஸ்டரின் உத்தரவு வாங்கின பிறகுதான் இங்க வந்திருக்கோம்."

"அன்னைக்கு ஏதோ ஷூட்டிங் குழு வருதுன்னு எங்கிட்ட...?"

"ம்ம்... அதையேத்தான் சிஸ்டர்கிட்டயும் சொல்லி அனுமதி வாங்கினேன்."

"சீருடைதான் சிறந்ததுன்னு சிஸ்டரோட அபிப்ராயம்..."

சந்தேகத்துடன் இழுத்தாள்.



"பாகுபாடில்லாமத் தெரியத்தான் சீருடை. இங்கேயு ஆடம்பரத்துக்கிடையே நீ இத்தனை எளிமையாய் தெரியற தப்பு."

அதற்குள் அவரைச்சுற்றி மூன்று சிப்பந்திகள் ஆவலு குழுமி விட்டார்கள்.

"தம்பி வர்லியா சார்?"

"கார்லேயே உக்காந்து படம் வரையறான். ஷாப் பிடிக்காது."

"என்ன சார் பார்க்கறீங்க? சூட்டிங்? ரெமெண்ட்ஸ்ல ரகமெல்லாம் வந்திருக்குது."

"மைசூர், காசின்னு காட்டுங்க... இன்னை இவங்களுக்குத்தான் வாங்கணும், ரெடிமெட் செக்ஷனுக் கூட்டிப்போய் இவங்களுக்குப் பிடிச்ச தினுசில ஒரு ப சல்வார்..."

இவளுக்குத் தலை சுற்றியது.

இவளது மொத்த உடமையே ஐந்து செட் உடைகள் அதில் ஒன்றில் போட்ட ஒட்டு அதிகம் தெரிகிறது எ நான்கை மட்டுமே எடுத்துப் போயிருந்தாள்.

"ஹல்லோ மிஸ்டர் தியாகு... கடைக்கு வந்து நாளாச்சு அனாதைவிடுதிக்கு கிறிஸ்துமஸுக்கு துணி அனு சொல்லிப் போன டிசம்பர் பெரிய ஆர்டராய் தந்தீ அதுக்கப்புறம் பார்க்க நேரலை. உங்க ரிஸார்ட் பிரமாத வருதுன்னு கேள்விப்பட்டேன். ஓகோ.. இவங்களு தேவையானதா? நான் கூடப்போய் கவனிச்சுக்கறேன்..."

நிர்வாகப் பொறுப்பிலிருந்த ஒரு குண்டு பெண் இவளைச் சர்க்கரை சிரிப்புடன் உள்ளே அழைத்து சென்

"உங்களை இதுக்கு முன்னே சந்திச்சதில்லையே...?" கேள்வித் தூண்டில் வீசப்பட்டது.

"இல்ல... இங்க வந்ததில்ல..."

கவனமாய் பதிலளித்தாள்.

"என்னென்ன நிறங்கள் பிடிக்கும் உங்களுக்கு?"

"எதுன்னாலும் பரவாயில்லை..."

"உங்க இள இஞ்சி நிறத்துக்கு எந்த வர்ணமும் பொருந்தும்."

அதிக ஜரிகை அற்ற மிருதுவான இரண்டு பட்டுச் சேலைகளையும் நான்கு சல்வார் செட்டுகளையும் தேர்ந்தெடுப் பதற்குள் புனிதாவிற்கு வெலவெலத்துவிட்டது.

"ஐயோ.. ஐயாயிரத்துக்கு மேலாகுதே..." இவள் மூச்சைப் பிடித்தபடி கேட்க, கடைப்பெண்மணி சிரித்துவிட்டாள்.

"நல்லதாய் உள்ளாடைகளும் உங்களுக்குத் தேவை. கூடவே சில ஒப்பனைப் பொருட்களும்.. நானே அதை தேர்தெடுத்துடுறேன்."

"ஐயோ... நான் எதுவும் தடவிக்கறதில்லை...."

"வேலைக்குத் தக்கபடி உடுத்திக்கணுமில்லையா?"

புனிதாவை அளவெடுத்து உள்ளாடைகளை தேர்தெடுத்த தோடு பக்கத்துக் கடைக்கு அழைத்து போய் இரு ஜோடி செருப்புகளையும் வாங்கினாள்.

"இதெல்லாம்... சார்கிட்டே..."

"அவரோட உத்தரவுப்படிதாம்மா வாங்கறேன். இன்ட்டர்காம் மூலம் விவரம் சொன்னாரே..."

தியாகராஜனா உள்ளாடைகளைக் கூட யோசனையாய் வாங்க உத்தரவிட்டது - நினைப்பே கூச்சமாயிருந்தது.

பணம் கட்டுமிடத்தில் சாய்ந்து நின்று, கடையின் முதலாளியோடு பேசிச் சிரித்த தியாகராஜனைப் பலரது பார்வை ஈக்கள் ஆர்வமாய் மொய்த்ததை கவனித்தாள். மேல்தட்டுவர்க்க மக்கள் மத்தியிலும் கூட அவர் கம்பீரம் தனித்து தெரிவது புரிந்தது.



"இன்னும் ஏதேனும் தேவையா புனிதா...?"

"இல்ல... இல்ல சார்... வினு தனியா பாவம்..."

"அவனைக் கான்வென்ட்டில் விட்டுட்டு வர சொல்லிட்டேன்.. பியானோ வாசிச்சிட்டிருப்பான்."

"நல்லது."

"இந்த கார்டன் சேலைகளையும் உனக்காய் எடுத்தே உனக்குப் பிடிச்சமாதிரி எளிமையான, ஆனா நாகரீகமா சேலைங்க இதிலே ஏதேனும் நிறம் பிடிக்கலைன்ன மாத்திக்கலாம்."

"கடவுளே..!"

"பில் கட்டப் போறது நான்" என்றவரது புருவம் ஏளனமா உயர்ந்தது.

"கடவுள் சிலருக்கு அதிகப் பணம் தர்றது தேவை படுவோருடன் பகிர்ந்து கொள்ள..."

"அதைத்தான் நான் செய்திருக்கேன் புனிதா...?"

பிறர்முன் வாதிட விரும்பாமல் இறுகினாள்.

பணக்காரர்கள் இயல்பு அவளுக்குப் புரியத்தானில்லை.

அன்று காலையும் ஒரு விவாதம் நேர்ந்துவிட்டது.

"அப்பா உங்க பேனாவைத் தாங்களேன்..." ஏதோ வரைந் கொண்டிருந்த வினோதன் கேட்க, வெகு இயல்பாய் அ தங்கநிற 'பார்க்கர்' வினுவிற்கு நீட்டப்பட்டது.

"நோ வினு.... உனக்கில்லை... ஒன்றுக்கு ரெண்டா பென்சிலைக் கூர் செய்து வைச்சிருக்கேன்.. அதோட வா 'கிரையான்ஸ்'' கூட இருக்குது... எதுக்குப் பேனா.. அதுவு பார்க்கர்?"

"அப்பா வேணாம்பப்பா..."

புனிதாவின் அதட்டலில் பேனாவைத் திருப்பிவிட்டான் சிறுவன்.

சமையல்காரரை முந்திக்கொண்டு மேசையை ஒழித்துத் துடைத்தாள்.

“ம்ம்... சதா ஏதாவது வேலையிருக்கணும் போல உனக்கு?”

“சோம்பல் சாத்தானுக்கு வரவேற்பு பாடிடும்...”

“மாற்றம் தேவதைகளுக்கு வரவேற்பு தரும். இந்த மாற்றம் உனக்கு சுவாரஸ்யமாயில்லை?”

“இந்த வசதியும்... உல்லாசமும்...”

“ம்ம்... சொல்லு...”

“கொஞ்சம் உறுத்துது..”

“வாழ்க்கை அனுபவிக்கத்தான்...”

“சொகுசான வாழ்க்கை மட்டுமே அனுபவமில்லை... மடத்துல சிஸ்டருங்க வாழ்வை, சேவையில் ரம்மியமாய் அனுபவிக்கறாங்க... அது உங்களுக்குப் புரியாது...”

“புகைபிடிக்கும் மணம் கிளம்பியது. அச்சூழலில் அவர் அழுத்தமான கம்பீரம் அவளுக்கு ஆண்மை என்பது முற்றிலும் வேறு என்பதை உணர்த்தியது.

இப்போது பணத்தின் வலிமை புரிந்தது.

ஒரு சின்ன சீட்டின் மூலம் பல ஆயிரங்களுக்கான பொருட்களை வாங்கிக் கிளம்பியது ஆச்சரியமாயிருந்தது.

அதே சமயம் கிறிஸ்துமஸுக்கு பல ஏழைகளுக்கு அவன் துணிமணிகளை பரிசளித்ததும் ஞாபகம் வந்தது.

ஆக பணக்காரர்கள் பாவ வாழ்க்கை வாழ்வதாய் நினைப்பதும் தப்புத்தானோ... அவர்களது வாழ்வுமுறை தனக்குப் பரிச்சயம் இல்லை - அவ்வளவே!

வினுவைக் கூப்பிடப் போனவர்களைச் சாப்பிட இருத்தி விட்டார்கள் சிஸ்டர்.பேச. மேலும் சற்றுநேரம் கிடைத்து.



“நீ கண்ணீரோடப் போக, எம்மனசு பரிதவிச்சது நி மகளே.. ஆனா இப்ப இத்தனைப் பிரகாசமாய் உன்னை பார்க்கறதுல திருப்தியாச்சு... நான் செஞ்சது தப்பில்லைன் புரியுது..”

மூத்தவளின் நிம்மதியைப் பாழடிக்க விரும்பாமல் தனக் புது துணிமணிகள் வாங்கிய விவரத்தைச் சொன்னாள்.

“தியாகு சொன்னாரம்மா..”

“ஏதோ ஷூட்டிங், பார்ட்டிங்கறார் சிஸ்ட பயம்மாயிருக்குது...”

“அவர் கட்டியிருக்கிற ஓட்டலுக்கு வேண்டிய விளம் செய்யணுமே? கட்டுமான வேலை முடிஞ்சதால கட் பெரியாட்களுக்கு விருந்துபசாரம் செய்யணும்.. விளம்பரத்த பார்த்துத்தான் டூரிஸ்ட்டுங்க தேடி வருவாங்க? இந்த ஓட்டல் ஏழைகளுக்கு கஞ்சி ஊத்தும் மகளே... கடல் சேரியில் இருச் பல பேருக்குப் பிரயோஜனம்... அவர்களுக்கு இங் வேலையுண்டு...”

“ஓகோ? இதெல்லாம் உங்ககிட்ட...?”

“அப்பப்ப விவரம் சொல்லுவாருப்பா... உன்னைப் பற்றி தியாகுக்கு ரொம்ப திருப்திம்மா.. கட்டிட வேலை முடிஞ்சு சமயமா வினுவுக்கு ரெண்டு மாச விடுமுறை வரு கவனிக்கறது கஷ்டம்னு நினைச்சதுக்கு மாறா எல் சுமூகமாய் போகுதுன்னு நன்றி சொன்னார்... அது உனக்குத் மகளே...?”

இம்முறை விடைபெற்று பென்ஸ்காரில் ஏறி அமர்ந்தே புனிதா கண்கலங்கவில்லை. சிஸ்டருக்குப் பெரு தரும்விதத்தில் நடந்து கொண்டோம் என்ற பெருமித இதுவரை கற்பனைக்கூட செய்யாதளவு புதுத்துணிகள் கொண்டு செல்லும் உற்சாகமும் பொங்கக் கையசைத் புதுப்பிரச்சினைகள் தனக்குக் காத்திருப்பதை உணர புன்னகைத்தாள்.




அம்மாதுளம்பழ வர்ண ஷிபான் அவளை மிகக் கவர்ந்தது. தியாகராஜன் அவளுக்காகத் தேர்ந்தெடுத்திருந்த சேலைகளில் அதுவும் ஒன்று. அதற்குத் தோதாய் ரெடிமேட் வெல்வெட் ரவிக்கையும் இருந்ததால், அன்றிரவே உட்கார்ந்து சேலைக்கு ஓரம் தைத்தாள். பொருந்தும் உள்பாவாடையும் எடுத்துக் குளியலறையில் வைத்துவிட்டு படுத்தவளின் மனம் எதிர்பார்ப்பில் பொங்கிக் கிடந்தது.

கூடவே ஒரு குற்ற உணர்வு- வந்த அன்று மெத்தையிட்ட கட்டிலில் படுக்கவும் கூசிய உடம்பு இன்று அது பழகி அடுத்தகட்ட ஆடம்பரத்திற்கு அடிமைப்படுகிறதோ என்ற சஞ்சலம்.

ஆனால் சிஸ்டர் கூட இவள் உடல் தேறித் தெரிந்ததில் மகிழ்ந்தார்கள். ஆக இதில் தப்பில்லை... நிம்மதியில் கண் செருகியது.

மறுநாள் இவள் குரலுக்குக் கண்விரித்த வினு பந்துபோல எம்பிக் குதித்தான்.

“ஹா மிஸ்.. நீங்களா? சூப்பரா இருக்கீங்க?”

வெட்கத்துடன் சிரித்தாள்.

“ஹை... இப்ப உங்க கன்னங்கூட சேலைக் கலருக்கு மாறுது?”

“போடா... எந்திரி முதல்ல...”

இப்பளீர் வர்ண சேலையில் தன் பெண்மை தூக்கலாய் அசத்துவதை அவளும் உணர்ந்திருந்தாள். அலசிய கூந்தல்



அலையாய, கவனமாய் சேலையைக் கொசுவி செருகியவளு கண்ணாடியில் தெரிந்த பிம்பம் தன்னுடையது தானா எ சந்தேகம் சற்றுநேரம் தீரவில்லை. இவள் முடி கோதி பின்ன பிம்பமும் அதையே செய்யவும்தான் நிச்சயமானது!

காலை உணவு முடித்து விநோதனுக்கு ஒரு புதுப் பாட்ட கற்றுத்தந்த போதுதான் தியாகராஜன் அறைக்குள் நுழைந் முகம் திருப்பாமலேயே அவர் பிரசன்னத்தை உணர முடிந் அவரது பிரத்தியேக மணமும் புகையிலை வாடையும மூக்கைக் கிள்ளின.

பாட்டை அவசரமாய் முடித்து எழுந்தாள்.

“குட் மார்னிங் சார்...”

இத்தனை நேரம் தன்னை இப்படியா பார்த்தபடி இருந் முகம் குப்பென சூடானது.

“என் தேர்வு நல்லாவேயிருக்குது...ம்..?”

அவர் கண்கள் கூர்மையாயின.

“வினு... ரெண்டு பேரும் என் அறைக்கு அஞ்சு நிமி கழிச்சுவாங்க...”

ஆறாம் நிமிடம் அவர் அறையில் நிற்க, மேசை மீதிரு மரப் பெட்டியை காட்டினார்.

“இதில் கம்மல், செயின், ஒரு ஜோடி வளையல் இருக் அதிக விலையுள்ளதில்ல... உனக்குப் பொருத்தமாயிருக்கு

“வேணாம் சார்...”

“இங்க இருக்கறவரை போட்டுட்டு... போகும்பே வேணாம்னா விட்டுட்டுப் போகலாம்.”

“இந்தச் சேலைகளைக் கூட பத்திரமாய் விட்டுட்டுத் சார் போவேன்.”

“இல்ல... இதெல்லாம் உனக்கேதான் புனிதா... இதுதா உடுத்த வேண்டிய நிறம், துணி. அதற்கான பணம் வே எங்கிட்டயிருக்கலாம். ஆனா அதையும் உன் உழைப்பால

நீ சம்பாதிச்சிருக்கே... தவிர அந்த சாக்கு நிற துணி உனக்குப் பொருந்தலை."

சாக்கினுள் பொதிந்திருக்கும்போதே ஆபத்து. இப்படி சல்வாத் துணியில் சிங்காரித்துச் சுற்றினால் வம்புதான்!

"ஏதும் விசேஷம் வந்தா மட்டும் இந்த நகைகளைப் போட்டுக்கறேன் சார்..."

"எளிய நகைங்க... ஆக எப்போதும் உடம்பில் இருக்கட்டும்."

"எப்போதும் இருக்க சாத்தியமில்லை. இன்னும் சில வாரங்களுக்குத்தான். அதில் இந்த ஆடம்பரமெல்லாம் பழக வேண்டாம்னு..."

"பழகி புளிக்கட்டுமே! உலக சந்தோஷம் ஏதும் அறியாம கடவுள் சேவை செய்யப் போவதைவிட, அத்தனையும் அனுபவித்து, அத்தனைக்கும் மேல் இறைவன் தான் என்று புரிந்து நிற்பது மேல் இல்லியா?"

இது சிஸ்டர் சொன்ன அதே புடலங்காய் தத்துவம்!

நகைப் பெட்டியை எடுத்துக் கொண்டாள்.

காதிலிருந்த சிறு வெள்ளி வளையத்தை முறுக்கி அவிழ்த்து கம்மலைப் போட்டாள். சிறுசாய் இருந்தாலும் கட்டித்தனமாய் ஜொலித்தது அந்நகை. மாதுளைமுத்து போன்ற மையக்கல்லைச் சுற்றி காவலாய் பொன் சரடு- இந்துக்கள் மஞ்சள் கயிறு என்பது தாலியைத் தானே? தன்னை இப்போது பார்த்தால் மணமானவள் போலத் தோன்றுகிறதோ? ஏழு பட்டை அகல வளையலை கைக்குள் திணிக்க விலங்கு பூட்டுவது போன்ற குமைச்சல்.

கதவு தட்டப்பட்டது.

"யாரு?"

"நாந்தாம்மா..."

சமையல்காரர் தலை நீட்டினார்.



"சொல்லுங்க..."

"இன்னிக்கு விருந்தாளி வருவாங்க போல... ஐயா என் சமையல்னு உங்களைக் கேட்டுக்கச் சொன்னாங்க..."

ஒருகணம் விழித்தாலும் சுதாரித்து, "வினுவுக்கு எ ஏதேனும் பாடம் தந்திட்டு சமையலறைக்கு வர்றேனே... அ நிமிஷத்திலே...?" அவரை அனுப்பினாள்.

இந்த புதுப் பொறுப்பு எதிர்பாராதது என்றாலும் எப்போது அவளுக்கு வேலைகள் வெல்லம்தான்... இங்கு முதுகொடி வேலைகள் கிடையாது. சின்னதாயினும் தன் பங்களி இருப்பது நிறைவுதானே...?

கிடைத்த வேலையில் மும்முரமானாள். உள் பூட்டிகிடந்த பீங்கான் தட்டுக்களை எடுத்துக் கழுவி, துடை மேசையில் வைத்தாள். நடுவே வெள்ளிக் கோப்பை பழங்களை பார்வையாய் அடுக்கினாள். பூ அலங்காரங்க ஆங்காங்கே செய்து, சமையலையும் மேற்பார்வையிட்ட பி தலை பின்னி, மறுபடி முகம் கழுவினாள்.

நேற்று விற்பனைப் பெண் மூட்டைக்கட்டி அனுப்பியிரு ஒப்பனை பொருட்களை ஆராய்ந்து மிக இயற்கைய நிறத்திலிருந்து உதட்டு சாயத்தை உதட்டில் ஒட்ட, முகம் மே பொலிவானது. அதே வர்ண நகச் சாயத்தையும் தட காயும்வரை, நம்பமுடியாமல் தன்னையே கண்ணாடி பார்த்திருந்தாள்.

நேற்று நூறு தயக்கங்களுடன் கடைக்குள் நுழைந்த தா இப்படி மாறியிருப்பது?

பாதங்களின் பழஞ்செருப்பு மட்டும் ஒவ்வாததாய் பட செருப்பை பிரித்துப் போட்டு நடந்தவளுக்கு, தன் நடை மிடுக்குடன் இருப்பதை உணர முடிந்தது. இப்புது அனுபவத் முகம் மலர வாசல் பக்கமாய் போனபோதுதான்... அந்த அதி கிடைத்தது.

"யார்... யாரு புனிதாவா?"

வியப்புடன் நிமிர்ந்தாள்.

எதிரே நின்ற பெண்ணும் தடுமாறினாள்.

"மன்னிக்கணும்... எனக்கு இதே ஜாடையில ஒரு பெண்ணைத் தெரியும்... அதான்..."

"சரிகா... சரிகாதானே நீ..?"

"அப்ப நீ புனிதாதானா?" புதிதாய் நுழைந்தவளின் விழிகள் விரிந்தன.

"ஆமா சரிகா!"

சொன்னவளுக்கு ஆச்சரியம் குறைந்து ஆனந்தம் விரிந்தது. ஆனால் சரிகா முகத்தின் மலர்ச்சி குறைந்து போனது.

"நா... நீ... இங்க?"

"விநோதனை கவனிச்சுக்கறேன்... பத்து நாளாய்தான் இங்க... இவனுக்கு அதாவது தியாகராஜன் சார் மகனுக்கு பள்ளி விடுமுறை... அவருக்கு வேலை இருக்குது... அதான்..."

"ஆயாவா வந்திருக்கேன்னு சொல்லு. உன் சேலை, அலங்காரமெல்லாம் பார்த்து திகைச்சுட்டேன்... பாக்கற வேலைக்குப் பொருந்தாத தோற்றம்."

உதட்டைச் சுழித்தாள்.

புனிதா முகம் கன்றியது.

"முதலாளி சொற்படி உடுத்தியிருக்கேன்..."

"தியாகுக்கு ரசனை ஜாஸ்திதான்... தெரியும்... அதுக்காக ஆயாவையுமா மினுக்கி நிறுத்தணும்?"

முகம் சுருக்கினாள்.

புனிதாவின் மனம் சுருங்கியது. மூன்றாண்டுகள் கழித்து சந்தித்த ஒரு தோழியை அன்பாய் விசாரிக்காமல் இதென்ன



பேச்சு? மேலும் இரு ஆண்களுடன் வந்த தியாகராஜனை த முக மாற்றத்தைக் கவனிப்பது கண்டு முகம் கவிழ்ந்தாள்.

"உள்ளே வா சரிகா... உன் அறையைக் காட்டறேன். முணங்கினாள்.

"புனிதா... உனக்கு சரிகாவை ஏற்கனவே தெரியுமா?"

"ஆமா சார்... அதே கான்வென்ட்லதான் சரிகாவு படிச்சா?"

"நல்லது... அப்போ சரிகாவுக்குப் பொழுது போறதி சிரமமில்லை... ம்ம்?"

"இந்த வேலையை நான் ஒத்துக்கிட்டதுக்கான காரண நீங்கதான் தியாகு..." சிணுங்கினாள் சரிகா.

"அதெப்படி?"

"உங்கக்கூட ஒருவாரம் தங்கலாம் என்ற ஆசை."

"வேலையில ரெண்டு பேருமே மும்முரமாயிடுவோ புனிதா, அது மிஸ்டர் லால்... நம்ப ஆர்கிடெக்ட், இ என்ஜினியர் பிரகாசம். இது புனிதா... வீட்டை, என் மக வினுவை பொறுப்பாய் பார்த்துக்கறா... வேண்டிய பொண்ணு.

பரஸ்பர அறிமுகத்தில் கைகூப்பினாள் புனிதா.

தன்னையும் மதித்து கவுரமாய் அறிமுகப்படுத்தியதி மனம் குளிர்ந்திருந்தது.

"சாப்பாடு தயாராய் இருக்குது சார்."

"பத்து நிமிஷத்தில் வர்றோம்... நீ சரிகாவோட அறையை காட்டிடு."

"சரி சார்..."

இவளைப் பின் தொடர்ந்த சரிகா பேசவில்லை.

பெட்டிகளை அறையில் வைத்த வேலைக்கார அகலும்வரை அழுத்தமாய் கூடவே நின்றது மவுனம்.

"இந்த மூணு வருஷத்தில இன்னும் உயரமும் வாளிப்பு மாயிருக்கே... காதிலே வைரம் வேற... ஒரு நிமிஷம் பயந்துட்டேன்."

"என்னென்னு?" குழப்பமாய் ஏறிட்டாள்.

"நீ வந்த தோரணை எஜமானியம்மா மாதிரில்ல இருந்தது?"

"நீ சொன்னது போல நான் ஆயாதான். அதென்ன காதுல வைரம்னே?"

"பின்ன..? பாத்ததும் பவுசானவளுக்கு வைரம் தெரியாது?"

"இது... இது சாதாரண கம்மல்தான் சரிகா... நீ தப்பாய்..."

"சீக்கிரம் முக்கியமான விஷயத்தைச் சொல்லிடறேன்... நான் தியாகு ரிஸ்டாட்ஸுக்கு எடுக்கப்படும் விளம்பரப்பட நாயகி பளபளன்னு தயாராகிற 'பிரோஷர்ஸ்'" அதாவது விளம்பரப் புத்தகத்திலே அத்தனைப் படத்திலும் நான்தான்... நீ இங்க வெறும் ஆயா ஆக நீ என்னை மரியாதையா கூப்பிடறது நல்லது. பலர் கேட்க, 'நீ வா போ'ங்கறது முறையில்லை... என்ன..?"

"புரியுது... மேடம்..."

மென்று விழுங்கியவள் பின் வாங்கினாள்.

"நீயும் உக்காரலாமே புனிதா" என்று தியாகராஜன் இருமுறை கூறியும் கூட புனிதா நாசூக்காய் பதார்த்தங்களை எடுத்து வரப் போவது போல பரிமாறியதும் நகர்ந்துவிட்டாள்.

பிறகும் சாப்பிட மனமில்லை. வேலைகளை முடித்து தன்னறைக்கு போய் அமர்ந்தவள் முன் பெரிய ஐஸ்கிரீம் கிண்ணம் நீட்டப்பட்டது.

"வாங்க மிஸ்... டிவி பார்த்துட்டே சாப்பிடலாம்."



"ஏம்ப்பா... எனக்கெதுக்கு இப்ப ஐஸ்கிரீம்?"

"ஓ... நீங்க இன்னும் லஞ்ச் சாப்பிடல... இல்ல?"

"அதுக்காக சொல்லல... சரி கொடு. இதுவே போதும்."

இனிப்பை நீட்டிய பிஞ்சு கையை பற்றிக்கொண்டாள்.

"இதுவே எனக்குப் போதும்... டட் டட் டடா!"

"கல்யாண சமையல் சாதம்" ராகத்தில் இழுத்தா பொடியன்.

"அடடே... வினுக்கு பழைய பட பாட்டெல்லாம் கூ தெரியுமா?"

"என் பியானோ டீச்சர் ஸர் பீட்டருக்கு அறுபது வய அதான்!" கண் சிமிட்டியவன்-

"உங்களுக்கு பாதி வேபர் பிஸ்கட் மிஸ்..."

தன்னதில் பாதியை ஒடித்து ஊட்டினான்.

இவளை அந்தப் பாசம் கவிழ்த்தது. அப்படியே சிறுவனை கட்டி அழுதால் தேவலை போன்ற உணர்வை கட்டுப்படுத்தினாள். அதிக பாசம் காட்டி இழைவது நல்லதல் பின் பிரிவு மேலும் வேதனையாகும்.

"தாங்க்ஸ்..."

அவசரமாய் ஐஸ்கிரீம் சாப்பிடுவது போல பாவனை காட்டினாள்.

"உங்க ஐஸ்கிரீம் காரமா இருக்குதா மிஸ்?"

"ஏன்... என்ன?"

"கண்ணு கலங்கி, மூக்கு சிவக்குதே... அதான் கேட்டே சீண்டிய சிறுவனுடன் சேர்ந்து வாய்விட்டு சிரித்தாள்!



## 6

இரவு தூக்கம் பிடிக்காமல், வீட்டின் பக்கவாட்டு கதவின் வழியே வெளியே வந்தவள் மெள்ள நடைபோட்டாள். தென்னைகள் உற்சாகமாய் அவ்விரவிலும் ஆடிக் கொண்டிருந்தன.

தூரத்தில் கடல் இரைந்தது.

இருட்டில் கருப்பு ராட்சசனாய் ஆர்ப்பரித்த சமுத்திரம் அச்சுறுத்தியதுதான்... ஆனால் இருளின் பாதிப்பே இல்லாமல் இரவிலும் பகல் போல இயங்கிய பணக்கார உலகத்தையும் அன்று பார்க்க நேர்ந்ததே!

எத்தனை விளக்குகள், ரக ரகமான உணவுகள், மனிதர்கள், பேச்சு, சிரிப்புகள்... எதிலும் ஒட்ட முடியவில்லை.

வினோதனின் கைபற்றி ஓரமாய் நின்றவளையும் அவர்கள் விடவில்லை.

"தியாகு... அதுதான் உங்க குழந்தைகளா? அழகான பெண்ணும் சுட்டிப் பையனுமா?"

ஒருவர் ஆர்ப்பாட்டமாய் கேட்க, நத்தையாய் சுருங்கினாள்.

"ஓ... புனிதா வந்தாச்சா... இப்படி வா... ஜெகதீஷ் இது என் பையன்தான்... பேர் வினோதன். புனிதா அவனைக் கவனிச்சு பாடம், பாட்டெல்லாம் சொல்லித் தர மேடம்."

"மன்னிக்கணும்... ரொம்ப இளம்பெண்ணாத் தெரிஞ்சதால... ஹிஹி..."

'சல்வார் போட்டு வந்தது தப்பு' என்று தன்னையே கடிந்து கொண்டாள் புனிதா.



கரும்பச்சையில் வெள்ளி வேலைப்பாடு செய்யப்பட் அவ்வுடை கூடாரம் போலத் தைக்கப்படாமல் உடலை சற் பிடித்தாற் போலிருந்ததை அதனுள் புகுந்த பின்புதா உணர்ந்தாள். அவளது இளம் உடலை அது நாகரீகமாய் வடித்த காட்டியது. இறுகப் பின்னப்பட்டிருந்த கூந்தலால் முக உருண்டையாய் தெரிந்தது.

சரிகா தக்காளி சிகப்பு ஜார்ஜெட்டில், செம்பட்டையாக் பட்ட கூந்தல் பறக்க, பட்டாம்பூச்சி போல ஒவ்வொருவரிடமு பறந்து போய் பேசி சிரித்தாள்.

இவளைக் கண்டுகொள்ளவில்லை. விளம்பர பட பிடிப்புக்கான குழு, புது இடத்தைப் பார்ப்பதும், ஒருவரு கொருவர் பேச, பயணக் களைப்பு தீர அமர்ந்து உண் என்றிருந்தார்கள்.

அன்றுதான் அப்பெரும் ஓட்டலைப் பார்த்தாள் புனிதா.

"ரொம்ப அற்புதமாயிருக்குது வினு..." சுற்றிப் பார்த்த பாராட்டினாள்.

"அப்பா செய்யற எல்லாமே நல்லாருக்கும் மிஸ்..."

"ம்... எத்தனை நாளாய் இதைக் கட்டினாங்க?"

"ம்ம்... நா யூ.கே.ஜி. படிக்கிறப்பவே ஆரம்பிச்சாச்சு. மு ஒரு பெரிய வீடாயிருந்துச்சாம்... அதையே மாத்தி இந்த ஹா நாலு 'ஸ்யூட்' அறைகளும் கட்டியாச்சாம்... மத்ததெல்ல புதுசாக் கட்டினது."

அறைகளையும் பார்வையிட்டார்கள். அனைத்தி பெரும் கண்ணாடி ஜன்னல்கள் வழியே கடலின் நீ விஸ்தாரம், ஆர்ப்பரிப்பு எல்லாம் தெரிந்தன. மறுபக் மாங்காய் வடிவிலான நீச்சல் குளம்- சுற்றிலும் தென் மரங்கள், ரகரகமாய் மலர் செடிகள், புல் தரையில் பால்வண் விளக்குகள், கற்சிலைகள், உல்லாசமாய் அசைந்த ஊஞ்சல்கள்..

"ஏதோ கனவுலகம் போலத் தோணுது வினு!"

"இது அப்பாவோட கனவுதான் மிஸ்... நனவாக்கிட்டாங்க..."

"ம்ம்... பணமிருந்தா எல்லாம் சாத்தியம்."

"உழைப்பும் திறமையும் இல்லாம இது சாத்தியமில்லை..."

பின்னாலிருந்து கேட்ட தியாகராஜனின் குரலில் திடுக்கிட்டாள்.

"கண்டிப்பாய்... ஆனா... ஆனா... காசில்லாம..."

"உழைச்சா, காசு வரும்தான்..." விடாப்பிடியாய் சொன்னவர் மகனை வேண்டினார்.

"வினு போய், எனக்கும் உங்க மிஸ்ஸுக்கும் கோக் ஊற்றி எடுத்து வர்றியா... கூடவே சாப்பிட ஏதாச்சும்...?"

"சரிப்பா..."

"வா புனிதா..." நீண்ட எட்டுக்களை வைத்து சோபா போன்றிருந்த ஊஞ்சலில் அமர்ந்து கைகாட்டினார்.

"உட்காரு..."

"இல்ல... இல்ல சார்... நிக்கறேன்."

"சங்கோஜப்படாதே... என் மகளான்னு கேட்கிறளவு நீ சின்னவ..."

"அவர் ஏதோ தெரியாம... எனக்கு இருபது ஆகுதே... சிலபேர் இப்படித்தான்... மன்னிக்கணும்..."

அவளின் பேச்சு தடுமாறியதைப் புன்னகையுடன் பார்த்திருந்தார்.

"இளமை உன் தப்பில்லை புனிதா. ஆனா இத்தனை இளமையில் நீ ஆமையாய் இறுகின மேல் ஓட்டுக்குள் பதுங்கிக்கிடக்கிறதுல எனக்கு வருத்தம். கொஞ்சம் சுதந்திரமாய் இருக்கறது தப்பில்லை... ஆத்தத்தோடு வாழறப்ப தனி சந்தோஷம் வரும்."



"எத்தனை தூரம் பிறருக்கு உபயோகமாய் இருக்கிறோமே அத்தனைக்கு நம் வாழ்க்கை பயனுள்ளதுதான். ஆ சந்தோஷமாவே இருக்கேன்."

"படிக்கிறேயில்லையா...?"

"ம்ம்... நர்ஸிங் படிக்கணும்னு ஆசை. ஆனா சிஸ்ட இலக்கியம் படி... இந்தப் பள்ளியிலேயே ஆசிரியைய இருன்னுட்டாங்க..."

"ஆக முடிவெடுக்கும் சுதந்திரமில்லை?"

"பெரியவங்க நமக்கு நல்லதைத்தான் சொல்வாங்க..."

"நானும் பெரியவன்தான். பத்து வயசுக்கு மூத்தவன் உட்காரு..." சொன்ன முகம் இயல்பாய் இருந்தாலும் அ அடர்ந்த மீசையின் கீழே உதடுகளில் குறும்பு தெரிகிறதோ?

ஊஞ்சலில் அமர்ந்தாள்.

அந்த அண்மை, ஆண் மணம் அவளை பாதித்தது.

"ஆக சொச்ச காலத்தை மடத்தில், பிள்ளைகளுக்கு பாட சொல்லியபடி கழிக்கப்போறே? அது ஒரு முழுமையா வாழ்க்கைன்னு நினைக்கிறியா புனிதா? வெளியுலகைப் பார் பிறகு இதுபற்றி அதிகம் யோசிச்சிருப்ப இல்லியா?"

ஓரக்கண்ணால் வினு வருகிறானா என்று பார்த்தா கேள்வி மிரட்டியது!

கழுத்தோரம் அத்தனைக் காற்றையும் மீறி வியர்த்தது.

"இல்ல... இந்தப் பேச்சு எதுக்கு?"

"வாழ்க்கையைப் பற்றி யோசிக்கணும் புனிதா... யோசி சொல்லு..."

"இப்ப அவசியமில்லை..."

"கான்வென்டல கீழ்ப்படிதல் கற்றுத் தந்திருப்பாங்களே

குரல் சற்று உயர்ந்தது.

"உங்களைப் பார்த்ததும் நான் நினைச்சது தப்பில்லை..."

"பேச்சை மாத்தறே! ஆனாலும் சொல்லு... என்ன நினைச்சே?"

"அழுத்தமான... முரட்டுத்தனமானவர்னு..."

"பிறர் அதையே ஆண்மை, கம்பீரம்னுவாங்க..! ஆனா அத்தனைப் பெண்களும் சொல்லறதையே நீயும் சொல்லாம வித்தியாசப்படறதுல சந்தோசம். ஆக நான் கறார்பேர்வழி சரி-எதனால... உன்னை யோசிக்கச் சொன்னதில்லையா...?"

புன்னகை விரிந்தது... அது கண்கள் வழியே தளும்பியது.

"இல்ல... நான் தப்பான முடிவெடுத்திருக்காப்ல பேசறது... கொஞ்சம் அதிகப்படி இல்லியா? கல்யாணம், பிள்ளைகள்னு சராசரி வாழ்வுக்கு ஆசைப்படற பெண்கள்தான் ஜாஸ்தி... அப்ட டியிருக்கப்போ..."

"நான் உன்னைப்பற்றி உன்னையே ஆராயச் சொன்னேன். சராசரியாய் வாழும் பொண்ணும் பிறருக்கு உபகாரம் செய்யலாமே... தங்களுக்கு அன்பான ஒரு குடும்பம் அமைச்ச திருப்தியில ஊருக்கும் நல்லது பண்ணலாம்."

"பண்ணட்டும்... அப்படிப் பண்றவங்க சொற்பம்... இப்படிக் கல்யாணம் பற்றி பேச்செடுக்க மாட்டீங்களான்னு எத்தனையோ அழகான பொண்ணுங்க காத்திருப்பாங்க... அவங்ககிட்டப் பேசாமல்..."

"காத்திருக்கும் அழகிங்க குணமும் அழகா இருக்கணுமே புனிதா? அன்புதான் அழகு! ஆணோ, பெண்ணோ தனக்கொரு குடும்பத்தை அன்பால அமைச்சு அதன் மூலம் நல்ல சமூகத்தை உருவாக்கணும். அதுதான் முழுமையான வாழ்வு..."

"ஏன் வினுவை இன்னும் காணலை...?"

"நீ பதில் சொன்னதும் வருவான்!"

"எனக்குக் காதல்ல நம்பிக்கை இல்லை... குடும்ப வாழ்வுக்கு அதுதானே ஆதாரம்? ஒரு ஆண் மேல வைக்கிற



அன்பு ஆபத்தானதுங்கறது என் அபிப்ராயம்... என் அம் அதனாலத்தான என்னைப் பெத்ததும் விட்டுட் போயிருக்கணும்... அந்த சஞ்சலத்தை அனுபவிக்க... எனக் ஆர்வமில்லை..."

"உன் பெற்றவங்களைப் பத்தி எந்தத் தகவ மில்லைன்னாங்க சிஸ்டர்... நாம பேசறது முறையான குடு வாழ்வு பற்றி..."

பேச்சு மிகத் தயக்கமாய்தான் வந்தது என்றாலும் வலித் கத்தியை நெஞ்சினுள் மெள்ளச் செருகினாலும் அதே அல் வேதனை தானே? முறையற்று தன்னைப் பெற்றதால்தா தன்னை உதறிவிட்டுப் போயிருக்க வேண்டும். இவர் பேசு சமுதாயத்திற்கு அடிப்படையான முறையான வாழ்வு பற்றி...

"புனிதா இக்கடல் ஆழத்தில்... சுறா மீன்களும் உண்டு...

அவள் உடம்பு அச்சத்துடன் சிலிர்த்தது.

"அதனால கடல் அற்புதமானதில்லை... அதன பயனில்லை என்று சொல்ல முடியுமா?"

"நான் அப்படியும் சொல்லலை... கடல்ல இறங் குளிக்காம நிக்கறேன்... அவ்வளவுதான்."

"ராமேஸ்வரத்தில் எத்தனை ஆர்வமாய் முங்கறாங்க?"

"அது குறையுள்ள தம்பதிகளுக்குன்னு கேள் பட்டிருக்கேன். கடல் உலகத்துக்கு அவசியம்... எனக்கு அ மேல் ஈர்ப்பில்லை. அவ்வளவுதான் கடலையே பார்க் மனுஷங்க உண்டுல்லையாஅது போல... நேரமாச்சு... வினுவு சாப்பிட தந்து வீட்டுக்குப் போகணும் நாங்க..."

"சரிகாவுக்கு நீ உடனிருந்தா துணை."

"மன்னிக்கணும்... நான் இங்க வந்தது வினுவுக்கா படபடத்தவள் விரைவாய் நடந்தாள்.

இப்படி ஒரு ஆணுடன், அதுவும் செல்வமும் கவர்ச்சி மிகுந்தவருடன் உட்கார்ந்து காதல், கல்யாண வாழ்க்கை ப

பேச நேர்ந்ததை நம்புவதே சிரமமாயிருந்தது. இப்படி கற்பனை கூட செய்யாதவள் அவள்.

இடையிடையே தன்னிடம் வந்து பல்காட்டும் டிரைவர் கோபியை சமாளிக்க முடிந்தவளால் முதலாளியிடம் அத்தனைக் கடுமை காட்டி விலக முடியவில்லை.

அதற்கு முதலாளி என்ற கவுரவம் மட்டுமில்லாமல் தியாகராஜனின் கண்ணியமும் காரணம்.

ஆரம்ப நாளைப் போல கோபி தன்னுடன் வந்து வழியாததற்குக் கூட முதலாளியின் கண்டிப்புத்தான் காரணமாயிருக்கும்.

கடலின் ஆரவாரத்தை மீறி மனித குரல்கள் கேட்டன. பலர் கையில் தட்டுடன் நின்றபடி சாப்பிட்டுக் கொண்டிருக்க, கடற்காற்று உணவின் மணத்தை சுமந்து இவளிடமாய் சேர்ந்தது.

வினுவைத் தேடினாள். அகல சோபாவில் ஒற்றை ஆளாய் அமர்ந்து சமர்த்தாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தவனை ஆச்சரியமாய் பார்த்தாள்.

"என்ன... சாப்பிட உக்கார்ந்திட்டே வினு?"

"பசித்தது அதான்..." சிப்ஸ் நொறுக்கியபடி பதில் வந்தது.

"உங்கப்பா கோக் கேட்டாங்களே...?"

"என்னை அங்கேயிருந்து கிளப்பணும்னு சொன்னாங்க!" சிரித்தான்.

"அப்படி நீயா நினைச்சுகிட்டியா?"

ஆத்திரத்தை அடக்கி அமைதியாய் கேட்டாள்.

"இல்ல மிஸ்.. அது அப்படித்தான்... தன் பாக்கெட்டில் கைவிட்டுட்டு அப்பா அப்படி சொன்னா... ஒடிப்போன்னு அர்த்தம்!"



சிக்கன் காலை சுவாரஸ்யமாய் கடிக்க ஆரம்பித்தான்.

இவளுக்கு விக்கியது! தன்னுள் குமிழிட்டது சிரிப்பா சி
என்று முழுக்க புரியாமல் படபடத்தாள்.

"சரி... நீ சாப்பிட்டதும் கிளம்பலாம்."

"நீங்களும் சாப்பிடுங்க மிஸ்..."

"எனக்கு... எனக்குப் பசியில்லை..."

"விருந்துக்கு வந்து சாப்பிடாமல் போனா தப்
அழைச்சவங்களுக்கு நாம மரியாதை தரலைன்னு அர்த்
உபதேசம் செய்தான் சிறுவன்!

"அதுசரி.. நீ அவனை கவனிச்சிக்கறதைவிட, வினு
உன்னைப் பொறுப்பாய் பார்த்துக்கறான் போல.. அவனுக்
சாப்பாடு கூட நான்தான் போட்டுத் தந்தேன்..." என்றாள் வ
நின்ற சரிகா.

"ஓ... நன்றி மேடம்..."

"அதுசரி... நீ எங்கே போயிட்டே? கண்லயே கா
வினுவைப் பொறுப்பாய் கவனிச்சிக்க வேணாம்?"

சற்று அதட்டலாய் வந்த கேள்விக்கு வினு பதிலளித்
"மிஸ் வந்து அப்பாவோட முக்கியமாய் பேசிட்டிருந்தா

சரிகாவின் முகம் கறுத்தது.

"இத்தனை நேரம்தியாகுவோடயா இருந்தே? அவனை
காணலையேன்னு பார்த்தேன். அப்படி என்ன பேச்சு?

"அப்பாகிட்ட கேட்டுக்கோங்க... மிஸ்... நீங்க சாப்பிடு
சீக்கிரமாப் போகலாம்."

புனிதா உணவு மேசையை நோக்கி நகர, தன் மு
சரிகாவின் பார்வை குரோதத்துடன் துளைப்பது புரிந்தது.




சரிகா சொன்னதுபோல அரை எலுமிச்சம்பழத்தை வெந்நீரில் பிழிந்து, தேன் கலந்து புனிதா நீட்ட, வாங்கிப் பருகியவள்,

“எனக்கு எட்டு மணிக்கு ரெண்டு டோஸ்ட்டும், ஒரு கப் ஓட்ஸ்ஸும் தயாராக்கி அனுப்பிடு புனிதா..இனிப்பு சேர்க்க வேண்டாம்.”

“சரிங்க..”

“சரிகா, இதையெல்லாம் நீ சமையல்காரர் சோமுகிட்ட சொல்றது நல்லது. புனிதாவுக்கு வினுவோடயே சரியாய் போயிடும். தவிர எனக்கும் ஒத்தாசையாய் இருக்கிறா...” வெட்டினார் தியாகராஜன்.

“உங்களுக்கு உதவற அளவு இவளக்கென்ன தெரியும்... இல்ல புரியும்?” உதட்டைச் சுழித்து சிரித்தாள் சரிகா.

“தொழில் நல்லபடி நடக்கணும்னா வீடு சரியாயிருக்கணும்... அந்த அடிப்படையே இப்ப புனிதா கையிலதானே?”

புனிதா தன் முதலாளியை நன்றியோடு பார்த்தாள்.

இப்படி தகப்பனும் மகனுமாய் தன்னைத் தாங்குவது புதியது என்றாலும் பிடித்திருந்தது.

“உன் அந்தஸ்து வெறுமே வேலைக்காரிதான்” என்று சரிகா மட்டம் தட்ட முனைய, சளைக்காமல் தனக்காக கைகொடுக்கிறார்களே.

“நான் பார்த்து அனுப்பிடறேன் சார்.”



“அவசியமில்லை. யூனிட் மொத்தத்துக்கும் படப்பிடி நடக்கும் இடத்துக்கே சாப்பாடு வந்திடும் ஓட்டலில் இருந்து.”

“எனக்குக் கண்ட சாப்பாடும் ஒத்துக்காதே தியாகு...”

“போன முறை, உன்னை மும்பை ஷூட்டிங்ல பார்த் போது ரோட்டில் விற்ற 'பாவ் பாஜீ' யைத்தானே சாப்பிட்டே?

சுண்டியது போல தளர்ந்தாலும், சரிகா சமாளித்தா “அடடே.. இன்னுமா அதெல்லாம் ஞாபகம் வைச்சிருக்கீங் தியாகு? ஆறு மாசத்துக்கு முன்ன என்ன சாப்பிட்டேன்னு?”

தியாகுவைப் பின்தொடர்ந்தபடி அவள் பேசியது இவர்க காதுக்கு தேய்ந்து போக, 'பாவம் அப்பா' பெருமூச்சு விட்டா மகன்!

“ஆங்... வினு, உனக்கும் புனிதாவுக்கும் எப்ப ஷூட்டி பார்க்கத் தோணுதோ அப்ப வரலாம். பென்ஸ் இங்கதா நிற்கும்.”

“தாங்க்ஸ்ப்பா...” 'படையப்பா' தினுசில் சலாமிட்டான் வி

எட்டத்திலிருந்து சரிகாவைப் பார்த்தபோதுதான் அவள உடை மிக மெல்லியதாய் இருப்பது புரிந்தது. உள்ே சொற்பமாய் ஏதோ உடுத்தி, மேலே மெல்லிய அங்கியை சுற்றியிருந்தாள். தியாகுவுடன் இணைந்து நடப்பதற்கா அவளும் காலை எட்டி வைச்ச வாளிப்பான கால்க வாழைத்தண்டாய் வெளிப்பட்டன. புனிதாவிற்குள் ஏே புரண்டது.

“எப்ப நாம அங்கே போலாம் மிஸ்?”

“எங்கே?”

“ஷூட்டிங் பார்க்க.”

“கண்டிப்பா போகணுமா வினு?”

“சும்மா வேடிக்கைப் பார்க்கலாம்ல?”

எல்லாத் துணியையும் உதறிவிட்டு காமரா வெளிச்சத்திற்கு முன்பு சரிகா நிற்க, அதை இவர்கள் வேடிக்கைப் பார்ப்பது சரியாயிருக்குமா? அயல்நாட்டுப் பயணிகளுக்காக ஸானா, ஜக்கூஸி, ஸ்டீம் என்று குஷியான குளியல் முறைகள் ஓட்டலில் இருந்தன. அவற்றுக்கான படப்பிடிப்பாய் இருப்பின் சரிகா முக்கால் நிர்வாணமாய் நிற்பாள் அதை.. யோசிக்கையில் சரிகா மீது இரக்கம் சுரந்தது.

பணக்காரரின் மூன்றாம் மனைவியின் மகளாய் பிறந்ததால் நேர்ந்த அவல வாழ்வோ இது? முறையான உறவில் முகிழ்த்தவர்கள் இல்லை என்று ஒதுக்கப்பட்டதால் இவர்கள் தாங்களாய் முண்டியடித்து வாழ வேண்டிய நிர்பந்தம் – வயிற்றுப் பாட்டிற்கான வழிமுறைகள்... வழுக்கலான வாழ்க்கை முறைகள்.

ஆனால் படித்து ஒரு கவுரவமான வேலையில் சரிகா சேர்ந்திருக்கக் கூடுமே. அவளுக்குமே இத்தகு ஆடம்பர, அலட்டல் வாழ்க்கைத் தேவைப்பட்டிருக்கிறது.

மூன்றாம் நாள் வினு சிணுங்கினான். "போர் அடிக்குது மிஸ்..."

"பீச்சில் வீடு கட்டலாமா... இல்ல பட்டம் செய்யலாம்..."

"ஷூட்டிங் பார்க்கப் போகலாம்."

"அப்படி சொல்லு விசயத்தை. சரி கிளம்பு."

ஐந்தாம் நிமிடம் வினு சோகமாய் திரும்பினான்.

"கோபி டிரைவரைக் காணோம்..."

"இங்கேயே இருக்கச் சொன்னாங்களே சார்?"

"ஆமா. ஆனா ஷூட்டிங் பார்க்கக் கிளம்பிட்டாங்க போல."

"அப்ப நடந்திருவோமா? ஒன்றரை கிலோமீட்டர் தூரந்தான். குடை எடுத்துக்கலாம்."

"ஓ... சரி!"



நடந்தபடி பேசலானார்கள்.

"மிஸ், இன்னைக்குக் காலையில ராஜிம்மா போ பண்ணினாங்க தெரியுமா?"

"அது யாரு?"

"அன்னைக்குக்கூட ஒரு பார்சல் வந்துச்சே?"

"ஸ்வெட்டர், கைக்குட்டைகளோட, நான் வந்த மறுநாள்?"

"நான் போட்டுக்கற குல்லாகூட ராஜிம்மாவே பின்னினது"

"அதான் யாருன்னு கேட்கறேன்."

"எம்பெரியம்மா... பெரியப்பா மனைவி. நான்ன ராஜிம்மாவுக்கு ரொம்ப இஷ்டம்."

"உனக்கும் அவங்களைப் பிடிக்கும்னு தெரியுது."

"என்னைவிட அப்பாவுக்கு அவங்களைப் பிடிக்கும்."

"ஓஹோ?"

"அவங்ககிட்ட மட்டும்தான் ரொம்ப நேரம் பேசுவாங் பெரியப்பா கூட நாலு கொட்டாவி விட்டுட்டு தூங்க போயிடுவாங்க.."

"உன்னை 'கோக்' எடுத்துவர அனுப்பிடுவாங்களாக்கும்' சீண்டினாள்.

"இல்லியே. நான்தான் ராஜிம்மா மடியில் தூங்கிடுவேன்!"

"ம்ம்... இப்ப எங்கேயிருக்காங்க?"

"கோவாவில் அங்கே மீன் ஏற்றுமதி பிஸினஸ் இருக்கு. அவங்களுக்குப் பிள்ளைங்க கிடையாது. அதனால் நான்ன உயிரு" பெருமையாக சொன்னான்.

பிள்ளைப்பேறு அற்ற ஒரு தாய். தாயில்லாத இந்த பிள்ளை இப்படி வாழ்க்கைப் பல விசித்திரங்களை பின்னுகிறது.

வினோதனது பிறப்புக்கூட அப்படித்தானே...

“இவனுக்கு ஏனிந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தேன் தெரியுமா?” ஒருமுறை வினு கடற்கரையில் வீடு எழுப்பிக் கொண்டிருக்க, இவளிடம் தியாகராஜன் பேச்செடுத்தார்.

“தெரியாது ஸார்... ஆனா தெரியுணும்னு அவசிய மில்லை?”

“நானும் யார்கிட்டயும் அநாவசிய தகவல்களைத் தர்ற ஆளில்லை.”

“அது தெரியும்.”

“ஆக உனக்குத் தெரியணும்னுதான் சொல்ல வர்றேன்.”

“ம்ம்...”

பாதங்களின் கீழே சுகமாய் குறுகுறுத்த மண்ணைக் கிளறியபடி நின்றாள்.

“வினுவை வயிற்றில் சுமந்தபோது சாந்தினிக்கு இருபது வயசுதான். அதுக்கு முந்தின வருஷம் எங்க கல்யாணம்.”

‘சின்ன வயசு...’ முணங்கினாள்.

“ஆளும் சித்து தேகவாகு. குழந்தை முகம்...” தூரத்தே சிவந்துகொண்டிருந்த அந்தி சூரியனைப் பார்த்தபடி பேசினார். அந்த செம்மைத்தான் முகத்தில் பிரதிபலித்ததா அல்லது உணர்ச்சிகளால் முகம் சிவந்திருந்ததா தெரியவில்லை.”

“வினு அவங்க ஜாடைதான்.”

மெள்ள முகம் திரும்பியது. ‘உனக்கெப்படி தெரியும்’.

“வினு அவங்கம்மா படத்தைக் காட்டினான். அதான்...”

“அவள் நிறைமாத கர்ப்பிணியாயிருந்த சமயம் - மதுரையிலே ஒரு கல்யாணத்துக்குப் போயிட்டு கன்னியாகுமரி திரும்பிட்டு இருந்தோம். அப்பமே இந்த வீடு சின்னதாய் இருந்துச்சு.. சாந்தினிக்கு இந்த ஊர் ரொம்பப் பிடிக்கும். ஜமீன்



மாளிகையைக் கூட அவ ஆசைப்பட்டதாலத்தான் வாங்க உத்தேசத்தோடு பேச ஆரம்பிச்சேன். ம்ப்ச்... இப்ப அதைத்தான் ஓட்டலாய் கட்டியாச்சு...”

“காரிலே வந்திட்டு இருந்ததாய்...”

“ஆங்... அப்பத்தான் அந்த விபத்து நேர்ந்தது. என்ன எப்படின்னு இன்னும் முழுசாப் புரியாத வேகத்துல..இமைக்கு நேரத்துக்குள்ளே... எங்களை முந்த விரைந்த லாரி உரசினது எங்க கார் நிலைதடுமாறி புரண்டது. அவ... அங்கயே அடங்க ஆரம்பிச்சுட்டா... நாடித்துப்பு மெல்லிசா இழைஞ்சது...”

அவர் குரல் மிகத் தணிந்திருந்தது.

“அப்ப குழந்தை வயத்துல...”

“ஆஸ்பத்திரியில் அறுவை செய்து உடனே குழந்தை எடுத்துட்டாங்க. அம்மா உயிர் பிரிஞ்சபிறகு பிறந்த மகன் அதான் விநோதன்!”

மவுனமாய் நின்றவள் கண்களில் நீர்ப்படலம்.

“மன்னிக்கணும் வினுவைப் பற்றி நீ தெரிஞ்சுக்கணு கறதுக்காக சொன்னேன். அவனை மென்மையும் திறமையும் வழிநடத்த பெண் இதுவரை அமையலை. அதாவது நீ வர் வரை. இதெல்லாம் கேட்டு மனமிளகி வினுவுக்கு அதி செல்லங் கொடுத்திட வேணாம்.”

“இல்லை, போதுமானதை தான் நீங்க தந்துட்டீங்களே!”

“நான் அவனைச் சரியானபடி வளர்க்கலைன்னு நினைக்கறியா?”

“முறையா வளர்க்கலைன்னா இப்படி முத்தாய் இருக் மாட்டானே.”

“ம்ம்.. நன்றி.”

“வினு அம்மாவைப் பற்றி சொன்னதுக்கு நன்றி சார்.. ஏன்னா நான் அதுபற்றி பையன்கிட்ட கேட்க சங்கடமாயிருந்தது..”

“கேட்டதும் சங்கடம்தான் இல்லியா?”

“அவனும் என்னைப் போல தாய் முகம் அறியாத பிள்ளை என்ற பாசம் - அவனுக்காவது நீங்க இருக்கீங்க.. அம்மாவைப் பற்றி விவரம் தெரியும்.. எனக்கு அதுவுமில்லை..”

“சிஸ்டர் சொன்னாங்க... அதனால் நீ ஆண்களை வெறுக்கணுமா புனிதா?” மணலில் கிடந்த சங்கினை எடுத்துப் பரிசீலித்தபடி கேட்டான்.

“தெ.. தெரியலை..”

“டிரைவர் கோபியைப் பிடிக்கலைன்னு..?”

“அது சரிதான்.”

“ஓஹோ.. என்னைப் பற்றின உன் அபிப்ராயம் என்ன பெண்ணே? பைப்பிடிக்கிற பார்ட்டிகளில் தேவையானா குடிக்கிற... பொண்ணுங்க மேல உரசினா கண்டுக்காத அயோக்கியன்னா?”

“உங்களைப் பற்றி அபிப்ராயம் சொல்ல நான் இங்க வரலை சார்..”

“ஆளு மெல்லிசா இருந்தாலும் அழுத்தமான பேச்சு!”

தியாகராஜன் பேசிய ஒவ்வொரு சொல்லும், அத்தனை அசைவும் தன் நிலைவில் அப்படியே பதிந்திருப்பதை உணர்ந்தாள்! அடிக்கடி அவற்றை தன்னுள் படமாக ஒட்டி தான் ரசிப்பது புரிய.. புனிதா பதட்டமானாள்!





நடந்து வந்தவர்களை பதறி வரவேற்றது [illegible]

“ஏன் தம்பி.. இப்படி நடந்து வர்றீங்க?”

“கார்ல ஏறி உக்காந்தா.. சும்மா உருண்டு [illegible] இல்லாம?”

“வினு தம்பிக்குக் கோபம்.. ரெண்டு [illegible] காத்துக்கிடந்தேன். இன்னைக்குத்தான் [illegible] வேடிக்கை பாப்பமேன்னு வந்தேன்.. [illegible] சொல்லிராதேப்பா..”

“அப்பா எங்க?”

“ஆபீஸ்ல... ஆனா ஷூட்டிங் [illegible] நடக்குது.”

புனிதாவும் வினுவும் நடந்தார்கள்.

“அதென்ன மூக்குப்பாறை?”

“கடலுக்குள்ள மூக்கு மாதிரி [illegible] அலை குதிச்சு பொங்கும் மிஸ்..”

“பயம்மா இருக்காதா?”

“ஆமா... அதான் இப்ப சுத்திலும் [illegible]

“நல்லதுதான். ஒட்டல்ல தங்க [illegible] தவறி விழுந்திட்டா கஷ்டம்.”

நெடுகப் போய் வலது [illegible] தொனிப்பாய் தெரிந்தது- மூக்கு [illegible]

"மிஸ்.. அங்க பாருங்க, அந்த ஆன்ட்டி உங்களைப் பார்த்து கை ஆட்டறாங்க."

"யாரு சரிகாவா?"

பார்வையைக் கூர்மையாக்க, பாறையில் நின்ற சரிகா தன்னை நோக்கி உற்சாகமாய் கரம் அசைப்பது புரிந்தது.

சரிகாவிற்குக் குடைப் பிடித்து நின்ற ஒரு பையன் குடையை அவளிடம் தந்துவிட்டு இவர்களிடமாய் ஓடி வந்தான்.

"மேடம் உங்கள வரச்சொன்னாங்க... அடுத்த ஷாட்டுக்கு நேரமாவும்."

வினு காமெரா பின் நின்ற இளைஞனுடன் பேசி ஒட்டிக்கொள்ள, புனிதா தனியே போனாள். பலர் இவளுக்குப் பரிச்சய புன்னகைத் தர, இவளும் மரியாதையான சின்ன புன்னகையுடன் நடந்தாள்.

எதற்கு சரிகா இத்தனை உற்சாகமாய் அழைக்கிறாள்? மற்றவர்கள் முன்பு பேச தடையுத்தரவு போட்டவள் இப்போது தணிந்து வருவதன் காரணம் என்ன?

"ஹலோ!" வரவேற்பு ஆர்ப்பாட்டமாய் இருந்தது.

"கூப்பிட்டீங்களே மேடம்..."

மீண்டுமாய் குடை பிடித்த பையனை- "நீ போடா... அப்புறமா வா" என்று துரத்தினாள்.

ஆரஞ்சும் மஞ்சளிலுமாய் பூக்கள் இறைத்த ஒரு மஸ்லின் துணியை இடையில் கட்டியிருந்தாள் சரிகா. அதே நிறத்தில் மேலே கச்சையிருந்தது. கழுத்தில் சாமந்தி பூமாலை. காதோரம் வட்ட செவ்வந்தி..

"நா...நா வேணும்னா குடை பிடிக்கவா? வெயில் அதிகமாயிருக்கே மேடம்?"

"சும்மா நீ, போன்னே பேசேன், புனிதா. சூரியன் இன்னும் கொஞ்சம் மேலேறினதும் நான் இப்படிக் கையைத்



தூக்கிட்டு நிக்கணும். ஆதவனை ஆவலாய் தழுவத் துடிப்பவ போல..."

"ஓஹோ... அப்ப எந்நேரமும் படம் பிடிக்க நேரலாம்... ந ஓரமாப் போய் நின்னுக்கறேனே?"

"ஐய்யோ... இரும்மா. முழுநேரமும் இந்தத் த பசங்கயோட நின்னு அலுத்துப்போச்சு புனிதா உங்கூட ரெ வார்த்தைப் பேசலாம்னா ஓடறியே?"

"வேலை நேரத்துல நான் தொந்தரவு செய் கூடாதுன்னு..."

"சொல்லு... சிஸ்டர் கிளேர் எப்படியிருக்காங்க?"

பார்த்த அன்றே விசாரித்திருக்க வேண்டியதை இ செய்கிறாள்...!

"நல்லாயிருக்காங்க... நேற்றுகூட கடிதம் வந்தது. மூட்டு எப்பவும் போலத்தான்... ஆனா மத்தபடி தேவலை..."

"நீ கல்லூரிக்கெல்லாம் போகலை இல்லியா புனிதா?"

"தபால் மூலம் படிச்சு... பரிட்சையும் எழுதிட்டேன்..."

"அடடே... நான்தான் ம்ப்ச்.. இப்படி வந்தாச்சு..."

"இந்த வேலை உனக்குப் பிடிக்குந்தானே?"

"ம்ம்.. உனக்கு உன் வேலை பிடிச்சிருக்கா புனிதா?"

"சிஸ்டர் அனுப்பிச்சாங்க. வினு நல்ல குழந்தை."

"உன் தோற்றம்.. ஏன் தோரணையே மாறிப்போச்சே.. வந்தப்ப, நீ வீட்டிலேருந்து வாசலுக்கு வந்தே ப சந்தோஷமான ஒரு குடும்பத்தலைவி போலவே இரு அதான் ஒரு நிமிஷம் திகைச்சுட்டேன்.. நம்ம புனிதா ஜா ஒருத்தியை தியாகு கல்யாணம் செய்திட்டாரோன்னு..."

"நான் கல்யாணம், குடித்தனம்னு எப்பவுமே யே தில்லையே?"

"ஆனா அன்பும், அடக்கமுமாய் வினுவுக்கு ஒரு தாய் கிடைக்க, தியாகு எதுவும் செய்வார்... உன்னை யோசிக்கச் செய்யத்தானா முடியாது?"

தன்னை தன் எதிர்காலம் பற்றி அன்று அவர் சிந்திக்கச் சொன்னது அசந்தர்ப்பமாய் நெருடியது.

"ஆனா, நீ புனிதான்னு நிச்சயமானதும் நிம்மதியாச்சு. புனிதா பணம், பவுசு கண்டு தன் லட்சியத்தைப் புதைச்சுடற ஆளில்லைங்கற தெளிவு!"

புனிதா மவுனமாய் நின்றாள். குனிந்து சீறி எம்புகிற அலைகளைப் பார்த்தால் தலைசுற்றியது.

"எங்கம்மாவையே எடுத்துக்க - மூனாவது பெண்டாட்டிங்கறது சும்மா. அந்த உறவுக்கு வேற பெயருங்கறது எல்லாருக்கும் தெரியும். ஆனா நீ அந்த மாதிரி ஆளில்லை. 'மனைவி'ங்கற அந்தஸ்து மட்டும் தான் உன்னை இன்னொருத்தர் வீட்டுக்குக் கொண்டுபோகும்..."

"நான் வெறும் ஆயாதான்."

இப்போதுதான் சரிகாவின் எரிச்சல், ஆங்காரத்துக்கான காரணம் புரிந்தது - பச்சாதாபம் சுரந்தது... முகமறியாத தன் தாயின் மீது அந்நேரம் இரக்கம் தோன்றியது - எந்த சூழ்நிலையில்... துக்கத்தில் தன்னை விட்டுப் போனாளோ?

"இப்படித் திரும்பு புனிதா... முகத்துக்கு நேராய் வெயிலடிக்குது பாரு."

சிந்தனையில் ஆழ்ந்திருந்தவளது கால்கள் தன்னிச்சையாய் திரும்பி. கீழே அலைகள் 'இங்கே வாயேன்' என்பதாய் கூச்சலிட்டுக் குதித்தன.

"தியாகு மனைவியை இழந்தவர்னு தெரியும். இப்பத்தான் அவர் மகனைப் பார்க்கறேன். அழகான பொடியன். அவர் மனைவி அதி அழகாய்த்தான் இருந்திருக்கணும்... ம்ம்?"

"ஆமா... வினு அவனம்மா ஜாடைதான். பத்தொன்பதில் கல்யாணம் இருபதிலே இறந்துட்டாங்க..."



சொன்னவளை ஏனோ துக்கம் பற்றியது. அருமை மகனை பார்க்காமலேயே மரித்த அவ்விளம் பெண்ணுக்கா ஆற்றாமை முண்டியது. பிறந்த சிசுவின் முகம் பார்த்தபிறகு 'வேண்டாம் நீ' என்று புறக்கணித்த தன் தாயின் நினைப்பு கூடவே ஏறி அறுத்தது!

இருபுற கடல் ஆரவாரம் தலையில் மத்தளம் போ இடித்தது.

சரிகா மேலும் அருகே வந்தாள்.

"உனக்கெப்படி இதெல்லாம் தெரியும் புனிதா? டிரை சொன்னானா? அவன் உன்னைப் பார்க்கற பார்வை தனி.. உரி விழுங்குறான்... இந்தத் தகவலெல்லாம் நீ கேட்காமலே சொல்லியிருப்பான் இல்ல?"

புனிதாவின் அடிநாக்கு வரை கசந்தது.

சரிகா கூறியதிலிருந்தது ஒதுங்க நினைத்து பி வாங்கினாள்.

"புனிதா நோ..."

அது யார்... தியாகுவின் குரலா?

குழப்பத்தில் தடுமாறினாள்.. பாறை விளிம்பிற்குத் த வந்திருப்பது அப்போதுதான் உறைத்தது.

பதட்டத்தில் பாதம் வழுக்க.. கைகள் காற்றைத் துழாவி பிடிக்காகத் தவித்தன!

அலறமுடியாத அச்சத்தில் மென்னி இறுகியது.

பாறையின் மூக்கு முனையில் இடப்பட்டிருந்த வே இங்கில்லை... கைக்குக் கிடைத்த பிடியை உடும்பாய் பற்றின

பிடித்தது பாறையின் விளிம்பு... கரடுமுரடான அது அ உள்ளங் கைகளை குத்தியது... முன்புற உடல் முழுக்க முரட் பாறையில் உரசியது.

மயக்கம் வரும் போலிருந்தது. முயன்ற புத்தி விழிப்பூட்டினாள்.

தோள்பட்டைகள் கழன்டே விழுந்துவிடுபவையாய் தளர்ந்தன.

இனியும் தாக்குப்பிடிக்க முடியாது என்று சோர்ந்த நொடியில் அவளைச் சுற்றியது ஒரு மிருதுவான கயிறு. இடையை முறுக்கி சுற்றியது.

"பாறையை விட்டுட்டு கயிறை பிடிச்சுக்கோ புனிதா..."

தியாகுவின் குரல் தைரியம் தர,பிடியை தளர்த்தி கயிறுக்கு மாற்றினாள்.

"பயப்படாதே பிடியை விட்டுட்டாலும் நீ விழமாட்டே கயிறு இருக்குது உன்னைச் சுத்தி..."

மிருதுவாய் மேலே இழுக்கப்பட்டாள்... ஆனாலும் பாறையின் உராய்வு காந்தியது- வயிற்றில் நெருப்பின் காந்தல்.

இரண்டு நிமிடங்களில் மேலேறினாலும் அது யுகமாய் தோன்றியது.

விரல்கள் தந்தியடிக்க உடல் சருகாய் நடுங்கியது...

பேச வராமல் உளறினாள்...

"ஒண்ணுமில்ல புனிதா... இனி எந்த ஆபத்துமில்ல..."

தியாகுவின் அணைப்பு மகா ஆறுதல் தந்தது. அப்புகையிலை மணம் தாலாட்ட... கண்செருகினாள்.

கண்விழித்தபோது கட்டிலில் இருந்தாள். அப்பரிச்சயமான இதம் சுகமாயிருந்தது. வழக்கம் போல ஒருக்களித்து படுக்க முயல உடம்பின் வேதனை உணர்ந்தாள்.

"ஸ்... ஆ..."

"என்னம்மா வலிக்குதா... சரியாயிடும்" புதுக் குரல் ஆசுவாசப் படுத்தியது. கண்களைத் திறக்க தெரிந்தது அப்புதிய உருவம்-

"நீங்க நர்ஸா?"



"ஆமாப்பா. டாக்டர் பார்த்தாச்சு. எலும்புமுறிவு. வெட் காயம் இல்லைன்னதும் அவர் வேலை முடிஞ்சது... இன் தலைசுத்துதா?"

"வலி..வலிக்குது..."

"பின்ன... மூக்குப்பாறையிலேருந்து தொங்கி சுகமாயிருக்குமா? இந்தப் பாலைக் குடிப்பா."

"வேணாம். வினு ஏதும் சாப்பிட்டானா?"

"முதல்ல குடிப்பா. பையனை சார் பார்த்துக்குவார்."

பாலை அருந்தி வைத்தவள் மருந்தைப் பூசிவிட்டாள். உடைகள் மாற்றப்பட்டிருப்பது புரிய சங்கடமாய் விழித்தாள்

"நாந்தாம்மா மாத்திவிட்டேன். ரெண்டு நாளைக்கு உடம் இறுக்காத நைட்டி மட்டும் போட்டுக்க... இப்ப சாராய்ப்புல அதிகம் தெரியாது. ரெண்டு நாள்ல கருநீலமாக கட்டிக் தெறிக்கும். இந்த மருந்தை அடிக்கடி தடவினா புண்ணா சீக்கிரமா ஆறிடும்..."

உள்ளங்கைகளிலேயும் மிருதுவாய் பூசிவிட்ட நைட்டி தோளில் வழிய அவசரமாய் உடம்பை மூடின புனிதா.

"விழுறப்ப அஜாக்ரதையா இருக்காப்பல இதில இருக்காதம்மா பிறவு சீழ்வைச்சிருச்சுன்னா கஷ்டம்..."

"ம்ம்..."

"இப்ப போய் அவரை வரச்சொல்றேன்."

"யா..யாரை?"

"தியாகு சாரைத்தான். ரெண்டு தடவை எட்டிப்பார்த்தா

தன்னைக் காப்பாற்றி அணைத்தது நினைவுக்கு அவசரமாய் மறுத்தாள்.

"வேணாங்க... வினுவை வேணா வரச்சொல்லுங்க."

“அவனுந்தான் வருவான்” என்ற நர்ஸ் தனக்கு இவள் அனுமதி அவசியமில்லை என்ற ரீதியில் வெளியேறினாள்.

மீண்டும் தலைசுற்றும் பிரமை... காலடி ஒசை நெருங்க, போர்வையை மேலும் இழுத்து கழுத்தோடு பிடித்துக் கொண்டாள்.

சம்பிரதாய வார்த்தைகள் இன்றி அவளைப் பார்த்த படி நின்றார் தியாகராஜன். கூட வினுவை, தாதியைக் காணவில்லை.

நகரமுடியாத இக்கட்டில் சிலையாய் சாய்ந்திருந்தாள்.

“உள் காயம் அதிகமிருக்கும் போல... வலிக்கு மாத்திரை தந்திருக்கார் டாக்டர்...”

“அதெல்லாம் அதிகமில்லை சார்...”

அவர் புருவங்கள் உயர்ந்தன. “எல்லாத்தையும் மூடி மறைக்க முயலாதே புனிதா. இதுவே விழுந்தது சரிகாவாயிருந்தா ஊரே கூடியிருக்கும்... கலாட்டா பண்ணியிருப்பா...”

“அவ அப்படியே பழகிட்டா.”

“அதாவது உணர்ச்சிகளை அடக்கப் பழகலைங்கற? அடக்கறும் அளவுக்குமீறி நஞ்சாகணும்கற அவசியமில்லை. பயம், வலி, ஆசை எதையும் ஒரேயடியாய் நமக்குள்ள அழுத்தக்கூடாது... மயக்கந்தான் வரும்... இல்லை?”

இவருக்கு தனக்கு வரப்போவது எப்படித் தெரிந்தது? தலைநெறித்து இருட்டு கிணற்றுக்குள் போவது போலத்தான் இருக்கிறது.

சாய்ந்து உட்கார்ந்திருந்தவளைத் தளர்த்தி படுக்க வைக்க முனைந்தான்.

“ஐயோ... வேணாம்” நத்தையா சுருண்டாள்.

“நான் கல்யாணமானவன் புனிதா... பெண்ணை எப்படித் தொடக்கூடாதுங்கறதும் தெரியும்” அதட்டியவன், மேல்



போர்வை விலகாதபடி அவளைப் படுக்க வைத்தா
ஒருக்களித்த நிலையில் புரட்டி உதவினான்.

“வினுவை சாப்பாடோட அனுப்பறேன். நீ தூங்
வரைக்கும் கூட இருப்பான்...ம்?”

‘நீங்களும் இருங்களேன்’ இவ்வேண்டுகோள் ஏறக்குன
நாக்கு நுனிவரை வந்துவிட அதிர்ச்சியுடன் மெ
விழுங்கினாள்.

‘என்னாயிற்று தனக்கு’ என்ற விதிர்ப்புடன், விலகிய அ
முதுகை வெறித்தாள்.



நடு இரவு தூக்கம் கலைந்தபோதுதான் அந்த எண்
மின்னலாய் உள்ளே வெளிச்சமிட்டது.

விளிம்பிற்கு முதுகு காட்டி நின்ற தனக்கு தான் அபாய
நெருங்குவது தெரியாமல் இருந்திருக்கலாம்... கலக்க
எண்ணங்களில் தன்னை மறந்திருந்த நேரம்...

கேள்விகளுடன் தன்னை நெருங்கியவளை
பின்னடைந்த நிலை... ஆனால் எதிரே நின்று சரிகா நி
கவனித்திருப்பாள்- அடுத்த எட்டில் கால் நழுவி புனித
அடிகள் கீழிருந்த கடலுக்குள், பாறைகளுக்குள் சி
போகிறாள் என்று கணித்திருப்பாள்.

இருந்தும் எச்சரிக்கவில்லை... ஏன்?

தன்னை விழச் செய்வதுதான் நோக்கமோ?

மனம் படபடத்தது.

நீலத் திரைச்சீலைகள் அலைபாய்ந்து, காற்றுக்குப் பஞ்சமில்லை என்றன... என்றாலும் வியர்த்தது.

இது ஏறக்குறைய கொலை முயற்சி!

தன்னை ஒழிக்க விரும்பும் அளவு சரிகாவிற்கு ஏன் வெறுப்பு?

மரணத்தின் மடியில் இருந்தபோது உணர்ந்த பயத்தை மறுபடி அனுபவித்தாள் புனிதா.

மாலை நேரம் வினுவும் நர்சும் உடனிருந்ததால் வேறு நினைப்புகளில்லை. மாத்திரைகளின் உபயத்தில் உடனே உறங்கி விட்டாள். இப்போது இருளும் தனிமையுமாய் இணைந்து மிரட்டின. அருகே பலபேர் இருக்க சரிகா எப்படி அதற்குத் துணிந்தாள்? யாருமில்லை என்றால் பாறையில் தொங்கிய தன்னை எட்டித் தள்ளியிருப்பாளோ?

நாக்கு வரள... சுருண்டு படுத்தாள். உடல் வேதனை மிகுந்தது.

வெளியே காலடி ஓசை கேட்டது. இரவின் அமைதியில் துல்லியமான சத்தம்.

சீராய் தன்னை நெருங்கிய ஒலியில் புனிதா நடுங்கினாள். தான் உறங்கியபிறகே நர்ஸ் வெளியேறியதால் கதவு உட்புறமாய் தாழிடப் படவில்லை... ஓடிப்போய் தாழிட்டுவிட்டால்...?

ஆனால் போர்வை விலக்கவே பெரும் பிரயாசமாயிருந்தது. கைகள் கனத்து, அசமந்தமாய் நகர்ந்தன. அது அச்சத்தாலா அல்லது தூக்க மாத்திரையின் விளைவா என்பது தெரியவில்லை.

அதற்குள் கைப்பிடி அசைந்து கதவு திறந்தது! அலற வாய் பிரிந்ததே ஒழிய குரல் எழவில்லை...

"என்ன... என்னாச்சு புனிதா?"

மொத்த பயமும் பனியாய் கரைய, உடல் தளர்ந்தாள்.



"ஹேய்..." ஓடிவந்து அவளைத் தாங்கினார். நடுங்க உடலை தன்னோடு சேர்த்தணைத்தார்.

"ஏனிப்படி வியர்க்குது... கெட்ட கனா கண்டியா?"

"ஊகூம்..."

மாரத்தான் ஓடியது போல மூச்சிரைத்தது.

"பின்ன? தூங்கறியானு சத்தமில்லாம பார்த்துட்டு பே வந்தேன். நீயான்னா படுக்கையில் அலறல் போஸ் உட்கார்ந்திருக்கே..."

அவள் பலவீனமாய் புன்னகைத்தாள்.

மிருதுவாய் தலைகோதினார்... "சரி, எதைப் பார் அரண்டே?"

"கதவு திறந்துச்சா... நா அது சரிகான்னு... இல்ல..."

"ஆங்... அப்ப நீ, நான் நினைச்சளவு முட்ட பெண்ணில்லை!" அவர் வலது கை அவளை இதம இறுக்கியது.

இவள் கண் இறுக்கினாள். கன்னத்தில் உராய்ந்த அவ கதர்சட்டையின் மொறமொறப்பு... அந்த ஆண்வாச உச்சந்தலையில் முட்டிய அவர் மோவாய், மோதிய மூச்சுக்கா அத்தனையும் மயக்கின.

"சரிகா எங்கிட்ட பேச வந்தாள்..."

"ம்ம்..."

"என்ன புனிதா இத்தனை அஜாக்ரதையாய் இருக் நல்லவேளை அவகூட வினு இல்லை... வழக்கம் போல முந்தானைக்குள் இருந்திருந்தா அவனுமி விழுந்திருப்பான்னா..."

"ஐயோ... அது நிஜந்தான?"

"பேச்சை திசைமாற்றாதே சரிகா... நீ புனிதாவை வாங்கச் செய்து, விழச் செய்தது முட்டாளுக்கும் புரியும்...

உன் நாடகத்தை முடிச்சுக்கோ, மூட்டைக் கட்டுன்னு சொல்லி அவளை அனுப்பிட்டேன்..''

''என்..என்ன..?''

''சரிகா மறுபடி வந்துடுவாளோங்கிற பயமில்லாம நீ இனி நிம்மதியாத் தூங்கு- அதுக்காகச் சொன்னேன்.''

''உங்க வேலை..? அவதானே மாடல்?''

''கூட அரை லட்சம் தந்தா மாடல் பண்ண மிஸ் இந்தியாவே வருவாங்க. தவிர பெரும்பாலான வேலை முடிஞ்சாச்சு. இன்னும் உணவகத்தில் சாப்பிடற மாதிரி ஒரிரு படங்கள்தான் தேவை. அதிலே உணவுதான் பிரதானமே தவிர பெண்ணில்லை. நீயும் வினுவும் ஒரு பலூடாவை ரசிச்சு சாப்பிடறாப்பல ஒரு படம் எடுத்தாலும் போதும்.''

''இந்த ராத்திரியில சரிகா எப்படிப் போவா?''

''விமானப் பயணத்துக்கான டிக்கெட்டை ஏற்பாடு செய்து, திருவனந்தபுரம் விமான நிலையத்துக்கு அனுப்பிட்டேன்.''

''என்னால் உங்க வேலை கெடுது..''

''வினு சந்தோஷமாய் இருக்கிறான், புனிதா. எனக்கு வேண்டியது அவ்வளவுதான்.''

நரம்புகளில் ஊசி ஊடுருவியது போலாக... மயக்கத்தி லிருந்து மீண்டாள்.

ஆக இத்தனை பரிவும், உபசாரமும் நடக்கக் காரணம் வினு! மகனை இவள் பாசத்துடன் பார்க்கிறவள் என்ற கரிசனையை மீறி ஏதுமில்லை...

வலிய விடுபட்டவளை வியப்புடன் பார்த்தார்- ''என்னாச்சு?''

''இப்பதான் புத்தி வருது- இந்நேரத்தில் இப்படி... நாம இருக்கறது தப்புன்னு..''

''ம்ம்... தப்புதான்.''



வழக்கம் போல அவரது கீழ் உதடுகள் குறும்ப

டைந்தனவோ? பார்க்க போதிய வெளிச்சமில்லை

அனுமானிக்கும் தெம்புமில்லை.

பிதுக்கு மருந்தை எடுத்து நீட்டினார்.

''இப்பவும் கொஞ்சம் தவிக்கோ புனிதா... முன்புறம் த சிராய்ப்புங்கறதால நீயே தடவிக்கலாம்... பசிக்குதா சொல்லு

''இல்ல சார்...''

''தியாகுன்னே கூப்பிடேன்...''

''ஐயோ... அது நல்லா... முறையிருக்காது...''

''சார் அந்நியமாக்குது. சரி தூங்கு. வினுவை உனக் துணையாய் விட தூக்கிட்டு வரவா?''

''கொஞ்ச நேரத்துல விடிஞ்சிரும்.. எனக்கும் தூக்கம் வரு

''நல்லது. மருந்தை மறந்துடாதே...''

கதவு மென்மையாய் மூடியது.

கண்டது கனவோ என்று திகைத்தாள்.

கரிசனையுடன் பார்க்க வந்தவர் ஏன் தன்னை அணை வேண்டும்? தானும் எதிர்ப்போ, வெட்கமோ இன்றி ஒ கொட்டானுக்குள் சுருளும் பாம்பு போல அவர் கரங்களுக் முடங்கியது ஏன்?

அந்த ஆண்வாசனையை-கதகதப்பை ரசித்து மயங்கியது ஏன்? இப்புது நெருக்கம் நல்லதா? இல்லை.

இரண்டுமாத வேலைக்காய் வந்த தனக்கு முதலாளிய ஏற்பட்ட இந்த இழையல் நிச்சயம் சறுக்கல்தான்!

இப்படித்தான் தன் தாயும் சறுக்கியிருப்பாளோ?

சிடீரின் நூறு நல்ல ஆலோசனைக் கேட்டு வள தன்னையே ஒரு ஆணின் ஆண்மை அடித்து வீழ்த்து என்றால் சராசரி சூழலில் வளர்ந்த தன் தாய் தவறி சாதாரணம்.

இதில் மனம் ஆறியது.

ஆண்-பெண் ஈர்ப்பு மிக வலியது என்பது புரிந்தது. ஆண்டவன் அவர்களைப் படைத்ததே ஒருவர் மீது ஒருவருக்கான ஈர்ப்புடன்தான்.. ஆக.. ஆக... ஒதுங்கியிருப்பது தான் சரி!

கோட்டை போன்ற மடத்தினுள் மறைந்து, ஆண்வாடை அற்ற காற்றை சுவாசித்து வாழ்வதுதான் பாதுகாப்பு.

அல்லது தானும் காதலில் சிக்கி அலைக்கழிந்து... இன்னொரு உயிரையும் இவ்வுலகில் அல்லல்பட பிறப்பித்து விடக் கூடும்!

உத்தமர்களாய் இருப்பவர்கள் சந்தர்ப்பம் கிடைக்காத வர்களே என்பது உண்மை!

புனிதா கண்விழித்தபோது நன்கு விடிந்திருந்தது. நர்ஸ் புன்னகையுடன் படுக்கையருகே காத்திருந்தாள்.

"ஓ... மன்னிக்கணும்..." அவசரமாய் எழ முயன்றவள் முகம் கோணியது.

"குட்மார்னிங்... மெள்ளப்பா..."

நர்ஸின் உதவியுடன் காலைக் கடன்களை முடித்தபோது, வினு காலை உணவுடன் நுழைந்தான்.

"என்ன மிஸ் கண்ணு சிவந்திருக்குது?"

அப்பாவைப் போலவே கூரிய பார்வை...

"இத்தனை மருந்து மாத்திரை எனக்கு ஒத்துக்கலை போலப்பா..."

"இன்னும் நாலு நாள்தான. பிறகு 'ஆன்ட்டி-பயாடிக்'ஸை நிறுத்திடலாம்னார் டாக்டர்."

"சரிங்க பெரிய டாக்டர்!"



"நேத்து ராஜிம்மா என்னை குட்டி டாக்டர்னாங்க... இப் நீங்க பதவி உயர்வு தர்றீங்க..." தோள் குலுக்கினான் பொடிய

"உன் பெரியம்மா வந்திருக்காங்களா?"

"இல்ல. போன்ல பேசினோம். நான் வரைஞ்ச படத் அப்பா அவங்களுக்கு அனுப்பினாங்களாம். நல்லாயிருந் ன்னு சொன்னாங்க.

"அவங்க அனுப்பின பரிசுக்கெல்லாம் நீ நன்றி...?"

"ஓ... சொன்னேனே.. அவங்க அதெல்லாம் வந்துச்சான் கேட்டதும் ஞாபகம் வந்து சொன்னேன்!

அரைச்சிரிப்பு வழிந்தது.

"உங்களைப் பத்தியும் சொன்னேன் மிஸ்."

"என்னன்னு?"

"நீங்க நேத்து மூக்குப்பாறையிலேருந்து விழுந்தன சொன்னேன். டாக்டர் உங்களுக்குத் தந்த மருந்தெல் சொன்னப்பதான் என்னைக் குட்டி டாக்டர்னாங்க ராஜிம்மா.

"போ வினு... எடுத்ததுமே நான் மந்தி போல பாறை தொங்கினதைத்தான் சொல்லணுமா?"

"அவங்களுக்குத்தான் உங்களை முன்னயே தெரியுமே

"அதெப்படி?"

"அப்பா அடிக்கடி ராஜிம்மாவுக்கு போன் பேசுவா அப்ப நானும் பேசுவேன்... உங்களைப் பத்தி சொல்வேன்...

புனிதாவிற்கு நெருடியது. பிற பெண்கள் தியாகரா பின்னே ஓடிவந்தாலும், அவர் நாடுவது இந்த ராஜிம்மா- அ அண்ணி... அந்நியோன்யமான பழக்கம்...

பிடிக்காத வாடைக்கு மூக்கு சுளிப்பது போல- இ எண்ணத்தில் மனசு சுளித்தது.

"ராஜிம்மா இப்ப வருவாங்க தெரியுமா மிஸ்?"

விலுக்கென நிமிர்ந்தாள்.

"எப்போ?"

"இன்னைக்கு ராத்திரி இங்க இருப்பாங்க... என் பிறந்த நாளை அவங்க மறக்க மாட்டாங்களே.."

"அப்ப... இன்னைக்கா உன் பிறந்த நாள் வினு?"

"நாளைன்னைக்கு.. ராஜிம்மா வந்துதான் 'கேக்' செய்யணும்."

"ம்ம்... இப்ப சாப்பிடுவோமா?"

"ஆமா, ஒரே பசி."

இவளுக்குச் சுத்தமாய் பசியில்லை. கடந்த மூன்று வாரங்களில் எத்தனை எத்தனை நிகழ்வுகள்... இவளைப் புரட்டி அடித்த சம்பவங்கள்... மனிதர்கள்!

இனி இந்த ராஜிம்மா வந்ததும் என்னென்ன நடக்குமோ? வந்த சில நாட்களில் சரிகா தன்னைக் கொல்லும் அளவிற்கு வெறுத்தது போல ராஜியும் இருந்தால்?

இன்னும் ஒரு மாதம் இங்கு தாக்குப்பிடிப்பது சிரமம். தியாகராஜனிடம் உத்தரவு வாங்கிக் கிளம்பிவிட வேண்டியதுதான்...

"என்ன புனிதா... எங்கேயோ பார்த்தபடி தட்டை அளையற?"

வந்து நின்ற தியாகராஜனைப் பார்க்கக் கூசியது. ஆனால் மறுபக்க மனசு... அவரைப் பாரேன் என்று உந்தியது.

"வினு, உனக்கொரு 'குஷி'யான சேதி கொண்டு வந்திருக்கேன்."

"ராஜிம்மா வந்தாச்சாப்பா?"

"இல்ல. ஆனா உன் பிரண்ட் பிரசாத் போன் பண்ணினான்."

"சேலத்திலிருந்தா?"

"கன்னியாகுமாரி வந்திருக்கானாம்."



ஜாம் பிசுபிசுத்த கையினால் அப்பா கையைப் பற் ஆடினான் வினு. "ஹையோ... வீட்டுக்கு வாரானாமா?"

"ம்ம்... அழைச்சேன். குடும்பமாய் டூர் வந்திருக்காங் நம்மூர் கோயில, காந்தி மண்டபம், விவேகானந்தர் பா எல்லாம் பார்க்க நீதான் 'கைட்' பண்ணணுமாம்.."

"ரெடியாயிடறேம்ப்பா..."

"சரி, புனிதாவும் உன் தொல்லையில்லாம ஓய்வு எடு வசதி" தியாகராஜன் பார்வை தன் மீது மொய்ப்ப உணர்ந்ததும் அவள் தலை நிமிரவில்லை.



10

சிராய்ப்புகளின் வேதனை குறைந்திருந்தது. ஒரு முழு படுத்திருந்ததே அதிகம் என்ற நினைப்பில் சின்னச் சி வேலைகளில் புனிதா ஈடுபட நர்ஸ் புன்னகைத்தாள்.

"அப்ப இனி எனக்கு வேலையில்ல.. ஒரு வாரமாகும் நினைச்சு வந்தேன்."

"நான் விழலையேம்மா... அதுக்குள்ளே காப்பாத்திட்டாங்

"மனசுக்கு அதிர்ச்சிதானம்மா. தவிர நீயும் உழைப்ப வர்க்கம்ங்கறதால எழுந்து நடமாடறப்பா... பணக் பொண்ணுங்க உள்ளங்காலை தலையில ஊனாதுங்க... பி அதுங்களுக்கே படுத்துப் புரள்றது அலுக்கவுந்த எழுந்துக்குங்க.."

"அவங்க உடம்பு சவுகரியத்துக்குப் பழகினது–அதான்

"அதுவுஞ்சரிதான். எம்மகளுக்கு நிறைமாசம். அத ராத்திரி வீட்டுக்குப் போக துடிச்சேன்."

"நீங்க கிளம்புங்கம்மா. எனக்கேக்கூட அறைக்குள்ளே அலுத்துடுச்சு..."

"அலட்டிக்காதப்பா. தந்திருக்கிற மாத்திரை வீரியமானது. அதான் வலி தெரியலை. அப்பப்போ களிம்பு தடவி ஓய்வா இருந்தா மூணாம் நாள் முழுக்கத் தேறிடுவே..."

"இங்க அதிக வேலையும் கிடையாதும்மா. வினுவைக் கவனிச்சுக்கறது தொல்லையில்லாத விஷயம்... சமர்த்துப் பையன்..."

"இத்தனை புண்ணியம் செய்தவர் பிள்ளை பொல்லாதவனாய் இருப்பானா? எஞ்சின்ன பிள்ளையோட, முப்பது இள வயசுப் பிள்ளைகளை கேட்டரிங் படிப்பு படிக்க வைச்சாரே தியாகுய்யா. அத்தனை பேருக்கும் நம்ப ஒட்டலிலேயே வேலையாயிடுச்சு... அக்கம்பக்கத்து ஜனங்களுக்கும் அவங்கவங்களுக்கு ஏற்றாற்போல வேலை... வயிறு வாடாதளவு சம்பளம்... அவருக்கேத்த புண்ணியவதி வாய்க்கணும்..."

"நிறைய அழகான பொண்ணுங்க அவரைச் சுத்தி..."

"அதெல்லாம் கழிசடைங்கப்பா. இத்தனை வருஷமா ஒரு அவப்பேரு வாங்காதவர்- ஒரு கெட்டப் பழக்கம் கிடையாதே."

"பைப்... அதாவது புகை விடறாரே?"

"சும்மா குடிப்பாரும்மா... ஆழ இழுத்துக்கறதில்லை... பழக்கமாயிடிச்சு... வர்ற பாக்கியவதி வேணாம்னா உதறிடப் போறாரு..."

"கொஞ்சம் வெளியே நடந்துட்டு வரலாமான்னு..."

"ஓ... நல்லதுப்பா. வெயில் தாழவும் பின் வழியா பத்து நிமிச நடையில் ஒரு மண்திண்டு வரும்... போய் உக்காந்திட்டு வாயேன். அத்தனை அழகான சிப்பியும் சங்கும் கிடைக்கும்... உள்ளங்கை அகல சிப்பி சாதாரணமாய் கிடக்கும்."

பேச்சை மாற்றிய புனிதாவிற்கும் கிடைத்த தகவல் சுவாரஸ்யமாயிருந்தது.



நர்ஸ் கிளம்பியதும் புனிதாவும் பின் வாசல் வழியே வெளியேறினாள். கடற்காற்றைச் சுவாசித்தபடி நடப்ப உற்சாகமாயிருந்தது. வானும் கடலும் சங்கமிக்கும் இடமே தெரியாதபடி இரு நீலங்களும் இணைந்து பரந்திருந்தன. மேலே சிதறியிருந்த வெண்மேகங்களைப் போலவே அழியு அலைகளை நுரைத்துத் தள்ளியது. சில கடற்பறவைகள் விரோ சத்தமெழுப்பிப் பறந்தன.

மற்ற குழப்பங்களூடே நாளைக்கு வரும் வினுவின் பிறந் நாளிற்கு பரிசாய் என்ன தரலாம் என்ற சின்னக் கவலைய சேர்ந்து குடைந்தது.

திடலில் கிடைக்கும் பெரிய சிப்பியில் படம் வரைந் 'பிறந்த நாள் வாழ்த்துக்கள்' என்று எழுதித் தரலாமா?

அது ஏழை தருவதற்கேற்ற எள்ளுருண்டை மட்டுமல் சொற்ப நேரத்தில் வினுவிற்குத் தெரியாமல் தயாரிக்க கூடியதும் கூட...

ஆகக் கால்களை எட்டிப் போட்டாள். நெஞ்சும் வயிறு காந்தின. முட்டிகளில் நடுக்கமிருந்தது. ஆக நடையை தொடர்ந்தாள்.

மணற்திடல் எதிர்பார்த்ததைவிட ரம்மியமாய் இருந்த ஆனால் அங்கிருந்து பார்க்க வீடு சின்னதாய் தெரியும்தா வந்த தொலைவு சொற்பமல்ல என்பதும் உறைத்தது.

சூரியன் திரி இழுத்தாற்போல் ஒளி குறைந்திருந்தான். அ மணி நேரத்திற்குள் வீடு திரும்ப வேண்டுமென்ற தீர்மானத்துட சிப்பி வேட்டையில் இறங்கினாள்.

கிடந்த ரகங்கள் ஒவ்வொன்றும் மற்றதுக்கு சவால் விட்ட வரிக்குதிரை போல கோடிழுத்த சிப்பி அபூர்வமாய் தெரிந் மற்றொன்று உள்புறம் முழுக்க வானவில்லின் வர்ணம் குழை பூசிய தினுசில் ஜொலித்தது.

எத்தனை நேர்த்தியாய் தான் வர்ணமிட்டாலும் இறைவ கற்பனையை எட்டமுடியாதென நினைத்தவள், அதன் மறுபு

'வினுவிற்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்' என்று மட்டும் எழுதினால்

போதுமென்று முடிவு செய்தாள்.

வெண்ணையைக் கூராய் உருட்டிய தினுசிலிருந்த சங்குகளையும் சேகரித்தாள். அதனையும் சேர்த்து வைத்த சேலை முந்தானை கனத்தது. இடுப்போடு இறுக செருகினாள். வலித்தாலும் இந்த உல்லாச வேலையில் மனதின் சலனம் அடங்கியிருந்தது.

கால்கள் வளைய, சற்று அமர்ந்தவளின் எதிரே கதிரவன் சிவந்து கனிந்தான். நினைத்தற்கு மேலாக நேரம் நழுவிவிட்டது புரிந்தது. ஆனாலும் சிறிது ஒய்வெடுக்காமல் நடக்க திராணியில்லை என்பது புரிய, நெடுமூச்சுடன் கால்களை நீட்டினாள்.

அரிதாய் கிடைத்த தனிமையின் சுகத்தில், தங்க மணலில் முதுகு அழுந்த மல்லாந்து படுத்தாள்.

இடுப்பிலும் கழுத்திலும் மணல்துகள்கள் குறுகுறுத்தன... முதலில் உறுத்தினாலும் பிறகு அதுவே இதமாய் பட, உடலைத் தளர்த்தி கண்மூடினாள். செங்கதிர்கள் அவளை இதமாய் தடவின. 'திடீர்' முகத்தில் இருள் கவிய இமை பிரித்தாள்.

நேற்றிரவைப் போல தியாகராஜன் வந்திருக்கக்கூடும் என்ற கடுகளவு எண்ணம் இருந்தது போலும்...

ஆனால் அருகே நின்றவனை எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை. முதன்முறை பார்த்தபோதே கதிகலக்கிய அச்சிவந்த விழிகள் இவள் மேனியில் தப்பு தப்பாய ஊர்ந்தன.

அவள் எழுவதற்குள் அவன் மண்டியிட்டான்.

"தயாரா படுத்திருக்கேன்னு வந்தா... ஏன் எழுந்துக்கறே?" கொச்சையாய் சிரித்து, தோள்களில் கைவைத்து அழுத்தினான்.



"கோபி... எனக்கிது பிடிக்கலை..."

"ஆரம்பத்துல எல்லாரும் சொல்றதுதான்."

குனிந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டாள். பற்க
...டிமளவு வெறித்தனமான முத்தம்...

"ச்சீ..."

அவனை வலுவாய்த் தள்ள, இவளுடைய புண்பட்ட உட
...ரிந்தது... எழமுடியாதபடி கனம்கூட்டிய சங்கு சிப்பிகளை
உதறினாள்.

"இங்க யாருந்தான் இல்லியே... பிறகு ஏன் டிராமா போடற?

"இது... இது-தப்பு..." திக்கினாள்.

"நேத்து முதலாளி உன்னை இப்படித்தானே மடியில் தூக்கி
போட்டுகிட்டாரு?"

அவளை இழுத்து தன்மேல் சாய்க்க முயல, இவ
திமிறினாள்.

"பணக்காரன் சாய்ச்சா போஸ் கொடுப்பீங்க. நாங்க என்
பாவம் செய்தோம்மா?"

"இப்ப செய்றதுதான் பாவம்... விடு..."

"விட்டுட்டா எந்திரிச்சு ஓடுவே... நான் உன்
வில்லங்கணக்கா துரத்தணுமே...!"

தான் பார்த்த ஓரிரு சினிமாக்களில் பார்த்த கற்பழி
காட்சிகள் நினைவுக்கு வர நெஞ்சு அடைத்தது. திரையில் க
காணச் சகியாமல் கண்மூடிய காட்சி இப்போது தன் வாழ்
நிகழ்ந்து கொண்டிருக்கிறதா?

"கோபி என்னைத் தொட்ட பிறகு... கொன்னு கட
வீசிடுவியா?" தைரியம் திரட்டிக் கேட்டாள்.

"ஆங்... ஜெயில்ல பதினாலு வருஷம் களி திங்க முடியா

“கற்பழிச்சாலும் ஏழு வருஷம். உள்ளதான்.”

ஒரு தினுசாய் விழித்தவன்- “அவ சொன்ன காரியத்தோட முடிச்சுகிட்டா வேற வேலை கிடைச்சு கண்காணாம ஓடிடுவேன்...”

“யார்... என்ன சொன்னா?”

“உன்னை இப்படிக் கட்டிக் கிடத்த சொன்னா... வாய மூடுறி...”

மேலே படர முயன்றவனை கால்களை மடக்கி எத்தினாள். தன் மானம் காக்கும் ஆவேசத்துடன் விசிறிய கால்களின் பலத்தில் கோபி மடங்கிச் சரிந்தான்.

வேதனையில் கெட்ட வார்த்தையில் சபித்தான். “இந்தா... நேத்து டாக்டரும் நர்ஸுமாக் கட்டில்லக் கிடந்தவ இப்ப எவ்வளவு தூரம் ஓடிடுவேன்னு பார்க்கறேன்... பொட்டக் கழுதைக்கு அழகிருந்தா பொதியாத் திமிரும் ஏறிடுது...”

எம்பி ஓட முயன்றவளின் கால்களைப் பற்றி இழுக்க, குப்புற விழுந்தாள். முதுகில் சிலிர்ப்பூட்டிய அதே குறுமணல் புண்பட்ட இடத்தைச் சுட்டது.

“ஸ்ஸ்... ஆ...”

அவனை அடிக்கவும் கூடாதபடி புண்ணாயிருந்தன உள்ளங்கைகள். ஆக உடலை முறுக்கி மல்லாந்தவள், மறுபடி காலால் உதைக்க, நெஞ்சில் அடிவாங்கினான். பாதத்தால் மணலை எத்தி விசிறினாள்.

காது கூசும்படியான வார்த்தைகளுடன் கண்மூடி அலறினாள்... துழாவிய கைகளுக்குள் அகப்படாமல் ஒதுங்கி ஓடினாள்.

கடவுளைத் துணைக்கழைத்தபடி விரைந்தாள். கடல் மண்ணில் அதிக வேகமெடுக்க முடியவில்லை. ஆனால் கண்ணில் மண்ணுடன் கிடந்தவனது கூக்குரல் அவளை விரட்டியது.



பின் வாசல் வழியே நுழைய, சமையலறையின் பரப அவளுக்கு விருந்தினர் வருகையைச் சொல்லியது.


“காபி டிரேயை எடு. கிரீம் பிஸ்கெட் வேணா அம்மாவுக்கு உப்பு பிஸ்கெட்தான் பிடிக்கும்.”

கடவுளே! வந்திருக்கும் முக்கிய விருந்தாளிகள் முன் இப்படிக் கலைந்த சேலையும், பரட்டைத் தலையும் அது நிறை முன்னுமாய் போகமுடியாதே! சமையல் அறையிலும் இவள இப்படிப் பார்த்தால் நூறு கேள்வி எழும்...

“மோட்டார் போடு வசு. நான் காபி கொடுத்துட்டு வரேன்

கிடைத்த சமயத்தை பயன்படுத்தி வீட்டினுள் நுழை மாற்று பாதை வழியே தன் அறைக்கு நழுவினாள்.

தப்பி வந்த ஆபத்து இப்போது முழுமைய உணர்ந்தவளுக்கு கண்ணீர் பெருகியது. கத்திக் கதறித் தீர் வேண்டும் போலொரு ஆத்திரம் உள்ளே முட்டியது. உதட்டை கடித்தபடி விம்ம மட்டுமே துணிந்தாள்.




“வினு. நீ வழக்கம் போல இல்லியே..?” சிறுவனை தூக்கிய ராஜி விசாரித்தாள்.

“நாள் முழுக்க வெயில்ல சுத்தியிருக்கான். புனி ஓய்வெடுக்கட்டுமேன்னு இவனைத் தனியே அனுமதிச் தப்பாய்போச்சு...”

“சும்மா தூக்கம் வருதுப்பா...”

“சாப்பிட்டுரலாம்... புனிதாவும் வருவான்னு காத்திருக்கோ

"இப்ப வந்திடுவா..." சொன்ன தியாகுவின் தாடை இறுகியது.

சற்று முன் புனிதாவைப் பார்த்த நிலை அவருக்குப் பிடிக்கவில்லை. தலையும் உடையும் கலைந்து... கன்னத்தில் காயமுடன்.

"எங்கிட்டயும் சொல்லாம, இந்நிலையில் நீ போனது தப்பு... இப்ப இப்படி மணல்ல விழுந்து புரண்டது போல வர்ரே... என்னாச்சு?"

இவள் முதுகு காட்டி நின்றாள்.

"ஒண்ணுமில்ல... குளிக்கப் போறேன்."

"அண்ணன், ராஜில்லாம் வந்தாச்சு."

"வினு...?"

"ஆறரைக்கு மேல்தான் வந்தான். சீக்கிரம் குளிச்சிட்டு வா, புனிதா."

"இல்ல... நடந்ததே அசதியாயிருக்குது. படுத்துக்கறேனே..."

"எப்படியும் நீ சாப்பிடணும். எல்லோருடனும் உட்கார்ந்து ரெண்டு வாய் சாப்பிட்டுட்டு வந்து படுத்துக்கோ. ராஜி உன்னைப் பார்க்க ஆவலாயிருக்கா..."

முதலாளியின் தொனியில்லாமல் தன்னைக் கெஞ்சியது நெருடியது. இவளுடன் இத்தனை தூரம் நெருங்கிப் பழகியது தப்புதானோ?

"வாங்கின பட்டுச்சேலையை இதுவரைக் கட்டலியே புனிதா.. உடுத்திட்டு சீக்கிரம் வந்திடு..."

ஷாம்பூ தேய்த்து கூந்தலை அலச, ரசாயன நுரைபட்ட உள்ளங்கைகள் காந்தின. கண்ணீரோடு வெந்நீர்விட்டு குளித்தாள். துடைத்தபடி கண்ணாடி பார்த்தவளுக்கு 'பகீர்'ரென்றது... கன்னத்தில் கோபி முத்தமிட்ட இடம் கன்றி



சிவந்திருந்தது... நேற்றைய விபத்தில் இது ஏற்பட்டதில்
என்பது எல்லாருக்கும் தெரியும்... ஆக இதை எப்
விளக்குவது...?

கன்னத்தில் கொழுத்த தேரை ஒன்று ஒட்டியது பே
அருவெறுப்பில் சிலிர்த்தாள்.

புதுப் பட்டு கட்டும் மனநிலை நிச்சயமாய் இல்லை.

ஆனால் தியாகராஜன் இவற்றை வாங்கித் தந்ததே
போன்ற சந்தர்ப்பங்களில் உடுக்கத்தானே... ஆக ஆரஞ்சு
மைசூர் பட்டை பிரித்துக் கட்டினாள். கறுப்பு முந்தானைக்
தோதாக கறுப்பு வெல்வெட் ரவிக்கை. ஈரக்கூந்தலை மு
வரை உதறி ஆற்றி சில 'கிளிப்பு'கள் கொண்டு அடக்கின

பவுடர் பூசியபிறகும் முகம் பேயறைந்த வெளுப்
கிடந்தது. கன்னத்து காயம் சிவப்பாய் மிரட்ட, பார்ப்ப
கவனத்தை அதிலிருந்து விலக்க, லேசாக உதட்டிற்கு சாயமி
கண்களுக்கு துளி மையிட்டாள்.

அடிவயிற்றில் பயம் சிறகடிக்க, மெள்ள விருந்தின
சந்திக்கக் கிளம்பினாள்.

"புனிதா நினைத்தது போலில்லை ராஜி. பெ
அழகியாய், தடாலடிப் பேச்சும் சிரிப்புமாய் பார்ப்பவ
கொள்ளையடிப்பவளாய் இருப்பாள் என்று நினைத்த
சம்பந்தமே இல்லாத தோற்றம்."

மெல்லிய உடல்வாகும், அமர்ந்த குரலுமாய் இருந்
கண்கள் மட்டும் அசாத்திய அழகுடன் மின்னின. கரு
ததும்பும் கனிவான பார்வை.

"வாம்மா புனிதா... உன்னைப் பற்றி நிறைய கேட்
இப்படி உட்காரு..."

"பரவாயில்லம்மா..."

மென்மையாய் இழுத்து தன்னருகே இருத்தினாள். "நேத்து மரண விளிம்பு வரை போய்வந்த நீ இப்ப தனியே உலாத்தலாமா? அந்தி சாய்ந்த பிறகு தலைக்கு ஊத்தலாமா... ம்ம்?"

"தலைமுடி மணலாயிடுச்சு..."

வழக்கமாய் 'ஹாய்... ரிஸ் நீங்க அப்ப மணல்ல தலைகீழா நடந்தீங்களா?' என்று குறும்பு பேசும் வினுவின் மவுனத்தை ஆச்சரியமாய் கவனித்தாள் புனிதா.

"வினு, தூக்கம் வருதா?"

"அடடே, அப்ப உன்னைப் பற்றி சொன்னதெல்லாம் சரிதான் புனிதா. நாங்க என்னப்பா செய்யுது அது இதுன்னு கேட்க, தூக்கம் தான் வருதுன்னான். நீ ஒரே பார்வையில் சரியான கேள்வியைப் பிடிச்சுட்டே... வாங்க சாப்பிட்டுரலாம்..." அழைத்த ராஜி, பரிமாற ஆரம்பித்த புனிதாவைத் தடுத்து, சோமுவுடன் சேர்ந்து தான் பரிமாறினாள்.

"உடம்பு சரியில்லாதப்ப அலட்டிக்காதம்மா..."

புனிதா நன்றியுடன் அமர்ந்தாள். பரிமாறுமளவு அவள் கைகள் தெம்பாயில்லை. விரல்கள் ஜன்னி கண்டாற்போல நடுங்கின. முறுக்கிய துணியாய் தொய்ந்தன கால்கள்.

அண்ணன், தம்பி தங்கள் வியாபாரம், நாட்டின் பொருளாதாரம் பற்றி பேச, வினுவைக் கவனித்தபடி இரண்டு வாய் சாப்பிட்டாள். சிறுவனின் முகம் கறுத்து உதடு வரண்டிருந்தது.

"காய்ச்சலடிக்கறதாப்பா?" யாரும் கவனியாத நேரமாய் அவன் கழுத்தில் கை வைத்தாள்.

"ஊகூம்... ஆனா..." பேசியவன் குமட்டினான்.

அவனைத் தூக்கி, கைகழுவும் இடத்தில் வாகாய் பிடித்து, முழுக்க வாந்தியெடுக்கப் பண்ணினவள் முகம் கழுவிவிட்டாள்.



"என்ன சாப்பிட்ட வினு?" அவள் குரலில் அமைதியா...
...யிருந்தது.

"ம்ம்... கொடுக்காப்புளி, சவ்வு மிட்டாய், இலந்தப்பழம்..."

"நல்ல லஞ்ச்... சமர்த்து வா."

வினுவைத் தூக்கியவள், சற்று முன் தொய்ந்த த...
...களுக்கு சிறுவனின் 25 கிலோவையும் சேர்த்து சுமக்கு...
...பு வந்ததெப்படி என்பதையும் யோசிக்காமல்-

"இவனைப் படுக்க வைச்சுட்டு வர்றேன்" என்றப...
...பினாள்.

"பால் ஒரு தம்ளர் தரலாமா?" ராஜி கேட்க,

"வேணாம்மா... வயிறு சரியில்லாதப்ப பால் ஒத்துக்காது...
...என்றாள். பத்து நிமிடத்தில் திரும்பியவள்,

"ஈனோஸ் கலக்கிய வெந்நீர் தந்தேன். ராத்திரி அப்ப...
வெந்நீர் மட்டும் தந்தால் நாளைக்குச் சரியாயிடுவா...
இல்லைன்னா டாக்டரை வரச்சொல்லிடலாம்... இல்லன்...
இப்பவே டாக்டரை வரவழைக்கவா சார்?"

"எதுக்குக் கண்டதையும் சாப்பிட்டானாம்?"

"கேட்டா அப்பா சிறுவயதில் சாப்பிட்டதையெல்லா...
நானும் வாங்கி ருசிச்சேன்ங்கறான்"

"இவனைப் போல நாங்க மினரல் வாட்டரிலேய...
வளர்ந்தோம்? எது சாப்பிட்டாலும் உடம்பு செரிக்கும்... தாங்கு...
ஓய்வெடுத்தா சரியாயிடுவான்னுதான் எனக்கும் தோணுது..."

"குழந்தைங்க இருந்தா இப்படி குறும்பு, குழறுபடி எல்லா...
உண்டு... ஆனா இல்லைன்னாலும் நம்ப வாழ்க்...
வனாந்தரமாயிடுது."

"ஆமாண்ணி... வினு இல்லைன்னா... அவ போனபிற...
நான் வாழ அர்த்தமில்ல..."

"ஆனா குழந்தைங்க நம் வாழ்வின் ஒரு அங்கம்தான் தியாகு... இல்லாத நாங்க இல்லையா? நாலு பேருக்கு உபகாரமாய் இருந்துட்டுப் போகவேண்டியதுதான்... அதுதான் வாழ்வின் அர்த்தம்... வளர்ந்ததும் பிள்ளைங்களுக்கும் அவங்கவங்க வழி..."

"ராஜி சொல்றது சரி. நமக்கென்ன வயசு குறைஞ்சுட்டா போகுது? நூறு பிரச்சினையை சமாளிக்கறதுல வருஷத்துக்கு நாலு வயசு கூடுற பிரமை! உன்னைச் சுத்தி இப்பவும் சதா குட்டிங்க மொய்க்குதடா தியாகு?"

"ஷ்ஷ்... மொய்க்கிற குட்டிகளைப் பத்தி என்ன பேச்சு? நிரந்தரமான நல்ல வாழ்க்கைத் துணை பத்தி பேச ஆரம்பிச்சேன்..."

"ம்ம்...? புரிஞ்சுகிட்டா புனிதம்தான்..."

இவர்களது அந்தரங்க பேச்சில தானிருப்பது தவறு என்று பட, புனிதா எழுந்தாள்.

"இனிப்பு சாப்பிடலியேம்மா புனிதா..."

"போதும்மா வினுவை கவனிச்சுக்கணும்" நழுவினாள்.

பிளாஸ்கில் வெந்நீர் வாங்கிச் செல்ல சமையலறைக்குப் போனவள், அங்கு நின்ற கோபியைக் கண்டு திகைத்தாள்.

பெரிய சமையலறையின் மறுகோடியில் சோமு, புட்டிங்கில் தூவ பாதாம்பருப்பை மும்முரமாய் நறுக்கிக் கொண்டிருந்தார்.

இவளை நெருங்கிய கோபி கீழ்குரலில் சீறினான். "என்ன பாதி விளையாட்டிலேயே ஓடிவந்துட்ட? மீதியை ராத்திரிக்கு வைச்சுக்கலாமா?"

"ச்சீ..." இவளும் மெள்ளவே சீறினாள்.

"இந்த கன்னத்துக்கு மட்டும் கொடுத்த... என்ன ஓரவஞ்சனைன்னு உன் அடுத்த கன்னம் சலிச்சுக்குதே..."



அவன் கை நீள, இவள் அவசரமாய் பின்னடைந்து எதி... முட்டி நின்றாள்.

"கோபி... இங்கே உனக்கென்ன வேலை?" இருவருக்... இடையே தியாகராஜனின் குரல் வாளாய் வெட்டியது.

"சோமுண்ணா, தம்பி அறைக்கு இதுல வெ... கொண்டாந்துடுங்க" என்றவள் வெளியேறினாள்.

அலுப்பும், சோர்வுமாய் உறங்கிய சிறுவன் அருகே நாற்காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்தாள்.

வெந்நீரில் விழுந்த மீனாய் மனம் துடித்தது.

"நான் இன்னைக்கு வினுவோட படுத்துக்கறேன் புனி... உன் அறைக்குப் போ... நீயும் ஓய்வெடு..."

தடுமாறி எழுந்தாள்.

"இடையிடையே வினுவுக்கு வெந்நீர் தரணும்..."

"நான் பார்த்துக்கறேன். உனக்கும் உடம்பு தேறணு... ஒருவேளை தேறத்தான் கோபிகிட்ட போய் கன்னத்துல ம... வாங்கிக்கிட்டயோ?"

கொதி நீர் போதாது என்று தியாகராஜன் அமிலமும் வ... நொந்து சிலையானாள்!



12

மறுநாள் வினுவின் முகம் தெளிந்துவிட்ட... அவனுடனேயே இருந்து மிகக் கவனமாய் உணவு த... மருத்துவரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு... செய்தது சரிதானா என்று சரிபார்த்துக் கொண்டாள்.

இரவு வினு தூங்கியதும் தன் அறைக்குப் போனவள், தன் டிரங்க் பெட்டியைத் திறந்து தான் கொண்டுவந்த உடமைகளை அதனுள் அடுக்கினாள். பழைய உடைக்கு மாறி, புதிதாய் வாங்கியவற்றை அலமாரியுள் வைத்து பூட்டியபோது, கதவு திறந்த சத்தத்தில் பதறி சாவியை நழுவவிட்டாள். நுழைந்த ராஜியின் கண்கள் சில விநாடிகள் சூழலை அனுமானித்து விட்டன.

"என்ன புனிதா... பெட்டி அடுக்கறே?"

"ஆமாங்க... வந்து ஊருக்கு... கான்வென்ட்டுக்கு..."

"தியாகுக்குத் தெரியுமா?"

"சொல்லிட்டுத்தான் போவேம்மா..."

"சொன்னபிறகு பெட்டியை அடுக்க ஆரம்பிச்சிருக்கணும்."

'அவர் உத்தரவு கிடைக்கலைன்னாலும்... நான் முடிவு செய்தாச்சு..."

"ஓ... இதுதான் கான்வென்ட் வளர்ப்பா?"

"சிஸ்டரை தயவுசெய்து குற்றம் சொல்லாதீங்கம்மா..."

"ரொம்பப் பொத்தி வளர்த்ததால சின்ன காத்துக்கும் சலனப்படறே..."

"இங்க... புயல்ல அடிப்பட்டாப்பல தோணுது..."

"புயலை தவிர்க்க முடியாது புனிதா. நம்ம மனசு பக்குவப்பட அதுவும் தேவைதான்."

"தாங்கற திராணி எனக்கில்லம்மா..."

"ஆக நாளைக்கு வினுவுக்கு நல்ல பிறந்த நாள் பரிசு தரப்போறே? அவன் எழுந்துக்கறப்போ நீ இங்கேயில்லை...?"

"எனக்கு வேற வழியில்லை..." என்றவளுக்கு 'சுள்' ளென்ற சுயநலமாய் சிறுவனின் பிறந்த நாளை மறந்தாயிற்றே.



"இன்னும் ரெண்டு நாள் பொறும்மா. பொறுமையின் பல தெரியும்."

"என்னையே பாதுகாக்கத் துப்பில்லாத நான் வினுவை எப்படி பார்த்துக்க முடியும்? பாறையில் விழுந்தேன்... இப்ப..."

"இப்ப... என்ன நடந்துச்சு?"

"கடற்கரையிலே... டிரைவர் கோபி..."

"வலிய முத்தமிட்டுட்டான்... அதானே?"

திகைத்து விழித்தாள்.

"அதான் உன் கன்னத்தைப் பார்த்தாலே தெரியுதே வெறிநாய் விழுந்து பிடுங்கியிருக்குதுன்னு..."

புனிதாவின் கண்கள் துளிர்த்தன.

"அவர்... சொன்னாராம்மா?"

"தியாகு ஏதேதோ சொல்லிட்டு பாறைபோல இருக்கா உங்கிட்ட விளக்கம் கிடைக்குமான்னு வந்தா நீ கிளம்ப தயாராயிருக்கறே..."

"கோபி எங்கிட்ட தப்பா நடக்க முயல, நான் தப்பி ஓ வந்தேம்மா... உடம்போட மனசும் நொந்த நிலையில் தியாகு சா நான் கோபிகிட்ட நெருங்கி... அதாவது ஆசையாய் போனதா குற்றம் சொன்னதைத் தாங்க முடியலை..."

"ஏன் முடியலை தெரியுமா? தியாகு நம்மைத் தப்பா நினைச்சுட்டாரே... அப்படி ஒரு கணம்கூட நினைக்கலாமாங்க ஆற்றாமை. தியாகு பக்கமுள்ள நியாயத்தையும் கொஞ்ச பார்த்திடுவோமே... ஒரே வருஷத்துல கட்டியவளை இழந் கடந்த ஏழு வருஷமாய் மகனுக்காக வாழற மனுஷன்... த குடும்பத்தை நடத்த ஒரு பெண் வேணும்னு புரிஞ்சாலு அவசரப்படாத ஒழுக்கமுள்ளவன். ஆனாலும் ஆ பிள்ளைக்கான அவசர புத்தி கொஞ்சம் உண்டு போல... கோ

உங்கிட்ட முறையில்லாம பேசினதைக் கேட்டதும் ஒரு கொதிப்பு ஏற்பட்டிருச்சு.. சரிகா திரிச்சுட்டுப்போன கயிறு பத்திகிச்சு புனிதா..''

''என்ன செய்தா சரிகா?''

''தியாகுகிட்ட சந்தேகத்தைக் கிளப்பியிருக்கா... நீ முதல்ல கோபியைத்தான் முதலாளின்னு நினைச்சுட்டியாமே?''

''அ..ஆமாங்க..''

''ஆக அவனுக்காகத்தான் புனிதா இங்கே வர சம்மதிச்சதே... இப்பப் பழகி ரெண்டு பேரும் ரொம்ப நெருங்கியாச்சுன்னு சொன்னாளாம். அதிலும் கோபி உன்னைப் பார்க்க பீச்சுக்குப் போறதாய் சோமுகிட்ட சொல்ல, அதுவும் தியாகு காதுக்கு வந்திருக்குது. போதாக்குறைக்கு கோபி உங்கிட்ட கன்னம், முத்தம்னு உளர, இவருக்கு ஏறிடுச்சு... உன்னை நேசிக்கறதாய் தியாகு கோடிட்டு காட்டினபிறகும் நீ பாராமுகமாய் இருந்ததுக்குக் காரணம் கோபி என்கிற நினைப்பு...''

''ஐயோ... என்ன சொல்றீங்க? ஏதோ கல்யாணம் வாழ்வுன்னார் ஒன்றிரண்டு தடவை...''

''பின்ன...? வெறும் நம்ம சினிமாவில் வர்ற மாதிரி 'ஐ லவ் யூ'ன்னு பாடித் திரியவா முடியும்? உழைச்சு உயர்ந்தவங்க தியாகுவும், என் கணவரும்... ஆனா அந்தத் துணிச்சல் பெண்ணின் முன்னே தடுமாறிடுது. சுத்திவளைச்சு பேசி... பிறகு பெண் ஒரு புதிர்எனக்குப் புரியலைன்னு புலம்பறாங்க... நாமதான் அவங்களைக் கொஞ்சம் புரிஞ்சுக்கணும்மா...''

''நீங்க சொல்றதும் எனக்கு முழுக்கப் புரியலை... மடத்திலேயே தங்கி, நாலு பேருக்கு உபகாரமாய் வாழணும்னு முடிவெடுத்திருக்கேன். நான் வளர்ந்த சூழலே வேற.. இங்க நான் பொருந்தலை...''



''நிச்சயமாத்தான் சொல்றியா?''

''ஆமா.''

''அப்ப சரி.''

ராஜி 'சட்'டென்று வழி விட்டுவிட்டாள்.

பத்தாம் நிமிடம், தியாகராஜனது அறைக்குள் போனவ அரை உயிராய் இருப்பது போல உணர்ந்தாள்.

''கான்வென்ட்டுக்கா?'' கோப்புகளை மூடி வைத்த அமைதியாய் கேட்டார்.

''மன்னிக்கணும் சார்... ஒரு மாசத்தில் கிளம்பறது தப்புத்தா ஆனா இங்கே இருக்க முடியாதுன்னும் தோணுது. அது அலம சாவி- சேலை, நகைங்களை பத்திரமாய் வைச்சுட்டேன்...''

''உன் முடிவு அதுதான்னா நானே உன்னை மடத்துக் கூட்டிப் போறேன் புனிதா... அதுதான் முறை...''

''ஆமா... சரி.''

''அங்கே பலருக்கு சந்தோஷம் தர முடியு நினைக்கறே?''

''...''

''இங்கே என் நிலைமையை யோசிச்சியா?''

''வினுவுக்கு என்னை விட நல்ல ஆயா கிடைப்பா நர்ஸம்மா கூட காலையில அவனைப் பார்த்து சம்மதிப்பாங்க...''

''நான் என்னைப் பற்றி பேசறேன்... நீ என் மனைவியா வ நல்லது. இல்லைன்னா என் நிலை பரிதாபம்தான்.''

இதென்ன... ராஜிம்மாவும் இவருமாய் சேர்ந்து ஒரு ஏ பெண்ணின் உணர்வுகளை இப்படிப் பந்தாடுகிறார்கள்...?

“இப்பதான் கோபியை விசாரிச்சேன். சரிகா எம்மனசுல விஷம் விதைக்க முயற்சி செய்ததோட நில்லாம அது செழிப்பா வளர நீரும் வார்த்திருக்கா... எங்கிட்ட உனக்கு கோபியோட நெருக்கம் இருக்குன்னவ, உங்கிட்ட தப்பா நடக்க கோபியைத் தூண்டிவிட்டு பணமும் தந்தாளாம்... என் மனசை நீ காந்தமாய் இழுக்கறேன்னு உடனே புரிஞ்சிகிட்டவள் உன்னைத் தீர்த்துகட்டவும் முயற்சி செய்தாள். ஏர்போர்ட்டுக்கு அவளை இறக்கிவிடப் போனது கோபிதான்... நான் அவளை அவமானப்படுத்தி துரத்திவிட்டதாய் மறுகினவ- அந்த ஆத்திரத்தில் கோபியை உனக்கெதிராய் தயார் படுத்திட்டா... உன்னைக் கெடுக்கற முயற்சியில் அவனுக்கு இங்கே சீட்டு கிழிஞ்சாலும் மும்பையில் இதைவிட பந்தாவான வேலை வாங்கித் தர்றதான உத்திரவாதம் வேற... அந்தத் தைரியத்துல பயல் ஆடியிருக்கான்.”

மூளைக்குள் தேனீக் கூட்டம் போல திகைப்பு சுழன்றது அடைத்தது. பிரமிப்புடன் கேட்டிருந்தாள்.

“இது தெரியறதுக்கு முன்னே ஏதோ அவசர முட்டாளாய் உங்கிட்ட பேசிட்டேன்... தப்புதான் மன்னிச்சிடு... கோபியைப் பார்க்க நீ கடற்கரைக்குத் தனியாப் போனியாங்கற எரிச்சல்... என் டிரைவர் உன்னை அழுத்தமாய் முத்தமிட்டுட்டாங்கற ஆங்காரம்...”

எழுந்து இவளை நெருங்கினார்.

“எனக்கும் உன்னை முத்தமிடணும்னு அடிக்கடி தோண ஆரம்பிச்சிருந்தது! எப்படி என் ஆண்மையை சீண்டி விட்டேன்னு தெரியலை... முதல்ல பார்த்ததும் உம்மேல சின்னப் பொண்ணு என்கிற பரிதாபம்தான்... பிறகு அதுவே மதிப்பாச்சு... பிரியமாயிடுச்சு... ஆக என் ஆசைக்கு அடிப்படை உன் குணம், கள்ளமில்லாத அன்பு... பொறுமை... எளிமை... அப்பப்ப வாயாடற துணிச்சல்... எல்லாந்தான் போல!”



முகம் சிவக்க தடுமாறினாள்.

“அது... அதெல்லாம் கான்வென்ட்ல கற்றது.”

“ஆண்கள் மீதான வெறுப்பு?”

“அன்பு மட்டுந்தான் சிஸ்டர் படிப்பிச்சாங்க... இதுபே... எல்லாம்...” உதடு துடிக்க தலைகவிழ்ந்தாள்.

“அதை நான் சொல்லித் தர்றேன் புனிதா. காத... அன்புதான்! உயர்வும் உன்னதமான உணர்வுதான் என் வாழ்... முழுமையாக்க நீ வேணுங்கறது போல... உனக்கும் ந... வேணும். என்னை நேசிக்கறதில் ஆரம்பிச்சு... பிறகு வினுவு... தங்கை, தம்பியெல்லாம் பெற்றுத் தரலாம். சமுகத்துக்... எத்தனையோ நன்மைகளை நாம சேர்ந்து செய்யலாம்...

புனிதா குழப்பமாய் ஏறிட்டாள். ஆர்வமாய் அ... முகத்தை ஆராய்ந்தாள்.

யோசிக்கவும்தான் தான் செய்யவிருந்த பெரும் த... புரிந்தது. இவரை, வினுவை விட்டு இத்தனை இலகுவாய் பி... முடியுமா?

உடலால் விலகினாலும் தினம் தினம் இவர்களை நினைத்து நொந்திருப்பாள்- சாகும் வரை ஏக்கத்... செத்திருப்பாள்...

ஆக இதுதானா காதல்...?

‘நீயில்லையென்றால் நானில்லை’ என்று பத்து வயது மூ... அந்தஸ்து, ஆஸ்தியில் மிக உயர்ந்த ஒருவர் வந்து கெ... நிற்பது எதனால்...

இதுதான் காதலா...?

கோபி தொட்டதில் அருவெறுத்த தேகம் இவர் மே... நெருங்கி, கட்டிக்கொள்ள மாட்டாரா என்ற அவஸ்தை... தவிக்கிறதே...

இதுதானோ காதல்...?

“என்ன இப்படி ஒன்னாப்பு குழந்தை போல முழிக்கறே? பால பாடம் ஏறியிருக்கும்னு நினைக்கிறேன்... இனி ஒவ்வொரு வகுப்பாய் கடைத்தேற்றலாம்.”

புன்னகையுடன் அவள் கைப்பற்றினார். அல்லித் தண்டு போல குளிர்ந்த விரல்களை கன்னத்தோடு சேர்த்தார்.

இவள் மவுனத்தில் பிடி தளர்ந்தது.

“என்னம்மா? உன்னைப் பார்த்ததும்தான் எம்மனசுல துணை பற்றிய கற்பனையே சுரந்தது... நீ அதுபோல கற்பனை செய்ற ஆளில்லைன்னு தெரிஞ்சுது. ஆனா நீதான் என் கற்பனைங்கிறதும் புரிஞ்சுது... இப்ப கற்பனை கைவருமான்னுற தவிப்பு... ம்ம்?”

மிடறு விழுங்கினாள்.

“சொல்லு புனிதா... என்னைப் பிடிக்கலியா?”

கேள்வியை நனைத்த தவிப்பு, தாபத்தை முழுதாய் அனுபவித்தவள் அவரை ஒட்டி சாய்ந்து கொண்டாள்.

“ரொம்பப் பிடிச்சிருக்கு... வினுவை... வினுவோட அப்பாவை” என்றாள் வெட்கத்துடன்.